விலை ரூபா: 8.00
*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 13 சனிக்கிழமை (26.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 97

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# அரசும் - புலிகளும் விட்டுக்கொடுத்து போர்நிறுத்தத்தை பேணவேண்டும்



## ஒஸ்திரிய சமஷ்டி அமைச்சக பிரமுகர் ஸ்ரெய்னர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் அமுலிலுள்ள போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மதித்துப் பேணும் வகையில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் அதிக விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு ஒஸ்திரியாவின் சமஷ்டி அமைச்சரவைக் கொள்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த கிளௌனஸ் ஸ்ரெய்னர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் சமாதான பேச்சு தற்போது சாத்தியமில்லையாம்

## அடித்துக் கூறுகிறார் கதிர்காமர்

(கொழும்பு)

**அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தற்போதைக்கு சாத்தியமில்லை என வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் இலண்டனிலிருந்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்துடன் இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொண்டு, அதில் உரையாற்றியபோதே லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதில் இருந்த நாட்டம் குறித்து சுனாமி அனர்த்த நிவாரணங்களுடனான அக்கறை முன் நோக்கிச் சென்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சுனாமி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்பிற்கும் விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனைகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என கதிர்காமர் கூறியுள்ளார்.

மேலும் புலிகளால் முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகார யோசனைகள் அதிகாரப் பரவலாக்கம், சர்வதேச அதிகாரங்கள், பாராளுமன்ற அதிகாரங்கள், மற்றும் நிதித்துறை அதிகாரங்களுடன் தொடர்புபட்ட ஒரு அரசியல் நடைமுறைகள்.

ஆனால் சுனாமி நிவாரண கட்டுமானங்களுக்காக உருவாக்கப்படவுள்ள பொதுக்•

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி கொம்மாந்துறையில் நேற்று முன்தினம் இரவு குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார்.

சுடப்பட்டவர் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதேஇடத்தைச்சேர்ந்த ஆறுமுகம் மணாளன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். இவரது வீட்டுக்குச்சென்ற சிலர் அவரின் பெயரை குறிப்பிட்டு அழைத்ததாகவும் அவர் வெளியே வந்தபோது 9 எம்.எம்.ரகதுப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச்சென்றதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# சத்திரசிகிச்சைக் கற்கைநெறி மாணவர் பிரச்சினை பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் சத்திரசிகிச்சை கற்கைநெறியை மீண்டும் ஆரம்பிப்பதில் உள்ள சிக்கல்நிலைகளை விளக்கும் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் நேற்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் சத்திரசிகிச்சைப் பிரிவு விரிவுரையாளர் பேராசிரியர் குணானந்தனை பிறிதொரு பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக தற்காலிகமாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு இரண்டரை மாத காலப் பகுதி உண்டெனவும் அக் காலப்பகுதிக்குள் அப்பதவிக்கான விண்ணப்பங்கள் பத்திரிகைகள் மூலமாக கோரப்படும் எனவும் அப்பதவிக்கு வைத்திய கலாநிதி குணானந்தம் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவுசெய்யப்படும் பட்சத்திலேயே அவர் நிரந்தர விரிவுரையாளராக நியமிக்கப்படலாம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலநறுவை தீவுச்சேனையில் கருணா குழுவின் முகாம் இல்லை

## மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப் புலிகளினதோ, கருணா குழுவினரினதோ முகாம்கள் எதுவும் இல்லை எனவும் இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவை தீவுச்சேனைப் பகுதியில் விடுதலைப் புலிகளிலிருந்து வெளியேறிய கருணா குழுவினரின் முகாம் இருப்பதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை. அப்பகுதியில் இராணுவ முகாம்கள் கூட இல்லை.

முத்துகல என்னும் இடத்தில் ஒரேயொரு இராணுவ முகாம் மாத்திரமே உள்ளது என தயாரட்ணாயக்க மேலும் தெரிவித்தார்.

அத்துடன் அரசிற்கு எதிராக வெளியிடப்படும் பிழையான தகவல்கள் நாட்டின் பாதுகாப்பையும் சமாதான நடவடிக்கைகளையும் பாதிக்கும். ஊடகங்கள் பிழையான தகவல்களை மக்களுக்கு வழங்குவதை தவிர்க்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ச)

# கைக்குண்டு வெடித்தது; ஒருவர் பலி; மூவர் காயம்

(கொழும்பு)

இரத்தினபுரி பவனெல்லப் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் காவலரண் ஒன்றிற்கு அண்மையில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் மரணமாகியுள்ளார்.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் பயணிகளை சோதனை செய்யும் பொலிஸ் நிலையத்திற்கு அண்மையிலேயே இக் கைக்குண்டு வெடித்துள்ளது. சிவனொளி பாதமலைக்குச் சென்ற பயணிகளை இறக்கிச் சோதனை செய்தபோதே இக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டுள்ளது.

கைக் குண்டை கொண்டு வந்த நபரே இக் குண்டு வெடிப்பின்போது மரணமானதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் ஒருவர் உட்பட மேலும் மூவர் படுகாயமடைந்தனர். (ச)

EXPOAIR யாழ் கொழும்பு எக்ஸ்போ எயார்
தினசரி விமான சேவை

T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
Your friend in the skies... E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...

# துவிச்சக்கரவண்டி வழங்குதல்

(யாழ்ப்பாணம்)

உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட, பொருளாதார நெருக்கடியிலுள்ள இருபத்தைந்து மாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு சர்வதேச மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் மாணவர் பேரவையைச் சேர்ந்த இ.புவிராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

எனவே இந்நிகழ்வில் துவிச்சக்கரவண்டிகளுக்காக பதிவினை மேற்கொண்ட மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட இருபத்தைந்து மாணவர்களையும் கலந்துகொண்டு துவிச்சக்கிரவண்டிகளைப் பெற்றுச் செல்லுமாறும் மாணவர் பேரவை கேட்டுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க பிரமுகர்கள் மற்றும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் புலம் பெயர் தமிழ் உறவுகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(க)

# வரி செலுத்த தவறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது

## அமைச்சர் டி.யூ.குணசேகர கருத்து

(கொழும்பு)

சட்டரீதியான முறையிலும், சட்டவிரோதமான முறையிலும் வரிசெலுத்த தவறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ.குணசேகர தெரிவித்திருக்கிறார்.

வரியை செலுத்த வேண்டியவர்களே இவ்வாறு வரியை செலுத்தாது விடுகிறார்கள்.

இந் நிலைமையை கட்டுப்படுததுவதற்காகவே வரி முறையை விஸ்தாிப்பதற்கும், வரி அளவை அதிகாிப்பதற்கும் தேவையேற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட கட்டளைச் சட்டங்கள் காரணமாக திறைசேரிக்கு கிடைகக வேண்டிய வரிமூலமான நிதியில் பெருமளவான நிதி கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் தெரிவித் துள்ளார்.

உள்நாடடுவரி, பந்தயம் பிடித்தல், சூதாட்டம் என்பவற்றுக்கான வரி திருத்தச்சட்ட மூலம் மிதான இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவற்றை அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரி சட்டமறு சீரமைப்பை கொண்டுவருவதன் மூலம், வரி செலுத்தாதவாகளின் நிலையை கட்டுப்படுத்த அரசு ஆலோசித்து வருகின்றது.

விசேடமாக பந்தயம், சூதாட்டம் ஆகிய துறைகளில் தொடர்புடைய பலர் வரி-செலுத்தத் தவறுவதாகவும் அவர்களை வரி செலுத்தவைப்பது சிரமமான காரியமென்றும் அவர் மேலு தெரிவித்தார்.

(7-8)

## சுனாமி நிவாரணப் பொருட்கள் பயனற்றவை

# லக்ஷ்மன் கதிர்காமரின் கருத்தை வன்மையாக கண்டிக்கிறார் பீரிஸ்

(கொழும்பு)

ஆழிப் பேரலை நிவாரணங்களாக வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பொருட்கள் பயனற்றவையென வெளிவிவகார அமைசசர் லக்ஷ்மன் கதிர்காமர் லண்டனில் தெரிவித்த கருத்துக்களை வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான ஜீ.எல்.பீரீஸ் தெரிவித்திருக்கிறார்.

கட்சியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஆழிப்பேரலை நிதியுதவியாக வெளிநாடுகளிலிருந்து எந்தவொரு நிதியுதவியும் கிடைக்கவில்லையென ஜனாதிபதி கடந்த வாரம் தெரிவித்திருந்தார். இதனையடுத்து வெளிநாட்டமைச்சரும் இவ்வாறான கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார். அரசாங்க முக்கியஸ்தர்களின இவ்வாறான பொறுப்பற்ற பேச்சுக்கள் நாட்டிற்கும், மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் அத்தகைய பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதற்கு அரசாங்கம் வெளி நாடுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற நிவாரணம் மற்றும் உதவிகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை சமாப்பிக்கவேண்டும்.

அததுடன் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் அரசாங்கம் தோல்வியடைந்திருப்பதினாலேயே இவ்வாறான பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(7-8)

# இராசி பலன்

**26.03.2005**
**பங்குனி 13, சனிக்கிழமை**
**பிரதமை பின்னிரவு 3.20 மணிவரை**
**அத்தம் பின்னிரவு 1.15 மணிவரை**
**இராகுகாலம் 9.14 - 10.44 மணிவரை**
**சுபநேரம் 3.14 - 4.44 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | தொழில் விருத்தி, தேக நலன், காரிய அனுசூலம், சுப நிகழ்வு. |
| இடபம் | பணக் குறைவு, காரிய இடையூறு, குடும்பக் கவலை, அஜீரண ரோகம். |
| மிதுனம் | புத்தி சஞ்சலம், தொழில் சிந்தை, புதிய திருப்பம், ரோக நிலை. |
| கடகம் | அதிக பிரயாசை, சகோதரர் உதவி, விருந்துபசாரம், நற்கீர்த்தி. |
| சிங்கம் | வாக்குமேன்மை, போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு, அதிக செலவு. |
| கன்னி | வெகுமானம், நல்ல சிந்தை, சயன சுகம், மாதர் நட்பு. |
| துலாம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், காரிய சிந்தை, பணவிரயம். |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம், தொழில் சிந்தை, நல்ல தகவல். |
| தனுசு | நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும், விருந்துபசாரம், தெய்வசிந்தை. |
| மகரம் | தந்தை வழி உறவு, நிர்ப்பந்த நிலை, திடீர் நன்மை, தொழில் சிந்தை. |
| கும்பம் | மனச் சோர்வு, காரிய தடங்கல், வாகன பயம், அபகீர்த்தி. |
| மீனம் | புதிய முயற்சி, தனலாபம், அதிகாரம், விருந்துபசாரம். |

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது

—வளவன்

# கலந்துரையாடல்

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் ஒழுங்கான முறையில் நடைபெற்று வருகிறதா, என்பதை ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த செவ்வாயன்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாச பணிமனையில் நடைபெற்றது.

தேர்தல் கண்காணிப்புக்குழுவினால் ஒழுங்கு செய்யப்படட இக் கலந்துரையாடலில், உதவிவழங்கும் நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகளை கண்காணிப்பதற்கான வடமராட்சி பிரதேசத்திலுள்ள கிராமங்கள் தோறும் இரண்டுபேர் வீதம் 40இளைஞர்கள் தேர்நதெடுக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சியும் வழங்கப்பட்டது.

இவ் கலந்துரையாடலில் பவ்ரல் அமைப்பு வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பாளர் சிறிதரன், யாழ்.மாவட்ட பவ்ரல் அமைப்பு இணைப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(7-35)

# 1136 மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறையாக உள்ளனர்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகை விகிதாசாரப்படி ஆயிரத்து 136 மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதால் இக்குறைபாட்டை நிவர்த்திக்கவென அரசாங்கம் விசேட திட்டம் ஒன்றை வகுக்க வேண்டுமென அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ் வேண்டுகோள் அடங்கிய கடிதத்தை மேற்படி சங்கம் சுகாதாரப் பராமரிப்பு போஷாக்குத்துறை அமைச்சர் நிமால் சிறி பாலடிசில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

தற்போது இலங்கையில் 794 மருத்துவ நிபுணர்கள் உள்ளனா. இலங்கை சனத்தொகைப்படி இத்தொகை ஆயிரத்து 900 ஆக இருக்க வேண்டும். இதன்படி ஆயிரத்து 136 மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது.

இககுறையை வைத்துக் கொண்டு நாட்டு மக்களுக்குச் சிறந்த சுகாதார சேவை வழங்க முடியாது. இக்குறைபாட்டை நீக்கவென விசேட திட்டத்தை வகுத்து நடைமுறைப்படுத்துவது அவசியம் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(7-9)





பெண்களன் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் வகையில் பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்ற “அரங்காலயம்” நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படம்.





யாழ்.கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற “அழகெழல்” போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களை படத்தில் காணலாம்.

(படங்கள்:- தெ.திலிப்)



கச்சேரி - நல்லூர் வீதி

# பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலய

# இரதோற்சவ சிறப்பு மலர் 26.03.2005



## மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி




ஓர் ஆலயத்தின் அதிக அருள்பொழியும் காலமாக மஹோற்சவம் விளங்குகிறது. இக்காலப்பகுதியில் இறை வியடமிருந்து அருள் எட்டுத் திக்குகளும் பேரணியாகப பரவிக்கொண்டிருக்கும். விழாக்காலங்களில பகலும், இரவும் சுவாமி வீதி உலாவரும் வேளையில் அருட்காட்சியின் உச்சநிலையை நாம் உணரமுடியும். விழாக்காலங்களில் சிறப்பான அருட்கோலம் தேர்த்திருவிழாவில் பெறமுடிகிறது. அன்றைய பெருங்கருணையைப் பெறுவதற்கு எட்டுத்திக்குகளிலும் இருந்து தேர்வடம் பிடிக்க பக்தர்கள் வருவார்கள்.

*'நின அடியாருடன் கூட்டியவண்ணம் அருள் காட்டியவா'*

என அபிராமிப்பட்டர் காட்டியதற்கிணங்க பாணன்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேர்வருங் காட்சியை அனைவரும் சேர்ந்து கூடிக் கண்டு அருள்பெற ஆசி கூறுகின்றோம்.

**மகாதேவ சோமசுந்தரக்குருக்கள்**
**கண்ணகை அம்மன் கோவில்,**
**இணுவில்.**



காலை 10.00 மணி

## ஆலய நிர்வாகத்தினரின் ஆசியுரை

நல்லூர் பாணன்குளம் நாச்சியம்மன் ஆலயத்தின் 14ஆவது ஆண்டு இரதோற்சவம் நடைபெறும் இவ்வேளையில் தேரேறி வரும் அம்பிகையின் அருட்கடாட்சம் அனைத்து அடியார்களுக்கும் கிடைக்கப்பெற்று நாட்டில் சாந்தியும், சமாதானமும் நீடித்திருக்க எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலயத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் அம்பிகையின் திருப்பணிகள் இனிதே நிறைவேற அடியார்கள் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளும் இதேவேளையில்,

கடந்த 24 ஆண்டுகாலமாக ஆலய பரிபாலனசபையின் தலைவராகப் பணியாற்றிய 04-08-2004 இல் மறைந்த அமரர் அ. விஜயரட்ணம் அவர்களையும் இந்நேரத்தில நினைவுகூர்ந்து எமது ஆசியுரையை நிறைவுசெய்கின்றோம.

சுபம்

நிர்வாகத்தினர்.

## அனுசரணையாளர்கள்


Dealers in all kind of Agri - Machineries, Spares & Accessories for Kubota, yanmar, MF, villiers, & Robin Importer & Exporters.

**NEW AUTOS**

112, Stanly Road, Jaffna.
T.P : 0777 941089

No 29A, DR.E.A.Cooray Mawatte, colombo - 06, Sri Lanka.

அபிராமி அழகு மாடம்

**ABIRAMY FANCY HOUSE**

27D, பெரியகடை, யாழ்ப்பாணம்

**YARLAKAM**

DEALERS IN SPORTS GOODS

568, Hospital Road,
Jaffna.
T.P : 222 5563

**THE FINACE CO. LTD**

No 173, Stanley Road,
Jaffna.
Tel/ Fax : 021 222 2310, 021 222 6256

**ஜெயலக்ஷன் பான்சி**

*Dealers in Fancy Goods & Silver and Items*

K.K.S. Road,
Jaffna.
T.P : 021 222 7098

**கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்**

162, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**பிருந்தா ஜுவல்லர்ஸ்**

நகை வியாபாரம்

297, (301), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சுந்தரேசன் குடும்பம்**

கட்டப்பிராய்

**AUTO SUPPLIERS**

256A, Stanly Road,
Jaffna.

# இன்று ஒரு தகவல்

## பண்புடையார் யார்?

மக்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையில் சிலரை நல்லவர்கள், பண்பானவர்கள் என்று பெருமைப்படுத்துவதையும் ஒரு சிலரைப் பண்பு கெட்டவன், பழகத் தெரியாதவன் எனத் தூற்றித் துரத்தியெறிந்து பேசுவதையும் அன்றாடம் நாம் காணவும், கேட்கவும் முடிகின்றது.

ஆயினும் நல்ல பண்பாடு என்பது எப்படியானது? எல்லோருக்கும் ஏற்படுமா? என்பது பற்றி ஆராய்ந்து பார்க்குமிடத்து, இலக்கியங்களில பண்பாடு என்றால் சான்றாண்மை, குணநலம், ஒழுக்கம், சால்பு எனவும் உலக நடைமுறைக்கு ஒத்தாற் போல நடப்பதையுமே பண்பாடு எனக் கூறப்பட்டுள்ளன.

வளளுவப் பெருந்தகையார் சான்றாண்மை பற்றிக் கூறுமிடத்து அன்பு, நாண்,ஒப்புரவு, வாய்மை,கண்ணோட்டம் ஆகிய நற்பண்புகள் உடையோரே சான்றோர் என விவாதிக்கின்றார்.

தாயுமான சுவாமிகள் அழகாக அரம்போலக் கூரிய அறிவுடையவராயிருந்தாலும் பண்பில்லை எனில் அவர்கள் மரம் போல்வர் எனக் கூறும் வள்ளுவர் வாக்கினை உறுதிப்படுத்துவதாக "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்" என விழித்துள்ளார்.

எனவே பண்பாடு கல்வியறிவினாலோ குடிப்பிறப்பினாலோ ஏற்படக்கூடியதன்று. இயல்பாகவே சிறந்த பண்பாடுகள் மக்கள் உள்ளத்தில் அமைய வேண்டும். சிறந்த பண்பாடுடையவர்கள் "எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் நன் மக்கள்" என்று சிறப்பித்துக் கூறப்படுவர்.

நன்றாகப் படித்தவர்கள், எல்லாம் தெரிந்தவர்கள் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் என்ற விதமாக சமுதாயத்தில் நாம் காண்பவர்களுடன் ஒட்டி உறவாடும் போது அவர்களில் அநேகமானோர் எவ்வளவு பண்பு கெட்டவர்கள் என்பதை அறிய முடிகின்றது.

மேலும் பண்டைக்காலம் முதல் தமிழ் மக்கள் தமக்கேயுரியதான நல்ல தனித்துவப் பண்பாட்டிற்குரியவர்கள் "யாதும் ஊரே! யாவரும் கேளீர்"என்ற உயர் சிந்தனை உடையவர்கள் என்றெல்லாம் படிக்கும் போது எம்மனம் எவ்வளவு பூரிப்படைகின்றது.

இன்றைய உலகில் நல்ல பண்பு என்பது எங்கே? இருக்கின்றது. யாரிடம்? இருக்கின்றது எனத் தேடி அலைய வேண்டியுள்ளது. வாழ்க்கையில் நன்கு அனுபவமான முதிர்ந்த பெரியவர் ஒருவரை அணுகி நல்ல பண்புள்ளவர்கள் யார்? எனக் கேட்டபோது,

"படித்தோரெல்லாம் பண்புற்றோரல்லர்.பண்புற்றோர் எல்லாம் படித்தோருமல்லர்"எனக் கூறிப் பண்புற்றோரைத் தேடித் திரியாது நீ பண்புள்ளவனாக வாழப்பார். அப்பொழுது தான் இந்த உலகத்தை அனுபவபூர்வமாகத் தெரிந்துகொள்வாய் என்றார். அப்பொழுது ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் எனும் குறள் வரிகளே எமக்கு ஞாபகத்திற்கு வருகின்றது.

*நீர்வைமணி*

# அரசியல் அரைவேக்காட்டுத்தனத்தை அம்பலப்படுத்துகிறார் கதிர்காமர்

(லண்டன்)

அரசியல்வாதிகள் உண்மைக்கு மாறானவற்றைக் கூறுவதும், கதை அவிழ்த்து விடுவதும் புதியவையோ அல்லது புதுமையானவையோ அல்ல. சில சமயங்களில் முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பது



போல விடயங்களை அமுக்கியோ இல்லாதது பொல்லாதது எல்லாம் கூறியோ அவர்கள் சரடுவிடுவார்கள். இவை எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதுபோல கதை விட்டிருக்கின்றார் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

சமீபத்தில் பி. பி.ஸியின் ஆங்கிலத் தொலைக் காட்சிச் சேவைக்கு அவர் அளித்த பேட்டியில்,

"இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாண்பதற்குத் தாங்கள் இணங்கியுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் செயற்பாடு எதையும் புலிகள் காட்டவில்லை. சமஷ்டித் தீர்வுக்குப் புலிகள் இணங்கியுள்ளார்கள் என்பது உறுதியான நிலைப்பாடு அல்ல. ஆழிப்பேரலை அழிவு, நிவாரண மற்றும் மீள் கட்டுமான வேலைகளைக் கவனிப்பதற்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்பது சிறிய விடயம் அல்ல. அதற்கான உடன்படிக்கை ஒவ்வொரு ஷரத்தாக வாசித்து, கவனித்து, இணக்கம் காணப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்" எனக் கதிர்காமர் அந்தப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளோடு அரசு இணக்கம் கண்டால் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறும் என்று கூறப்படுவதில் எந்த உண்மையுமில்லை. பொதுக்கட்டமைப்பு ஏற்படுவதை யாராவது எதிர்ப்பார்களேயானால் அவர்கள் பைத்தியக்காரர்களாகவோ அல்லது கிறுக்கர்களாகவோ தான் இருப்பார்கள். இவை அந்தப் பேட்டியில் லக்ஷ்மன் கதிர்காமர் திருவாய் மலர்ந்தருளியிருக்கும் உண்மைகளில் சில... தமிழர்களின் பாரம்பரியத் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து இலங்கை அரசுடன் ஆராய்வதற்குத் தயார் எனப் புலிகள் 2002ஆம் ஆண்டு இறுதியிலேயே ஒஸ்லோ பிரகடனம் எனப்படும பகிரங்க அறிக்கையிலேயே அறிவித்துவிட்டார்கள். அந்த யோசனைக்கான திட்டம் கூட அந்த அறிவிப்புப்படி புலிகளால் தான் முன்வைக்கப்பட்டது. அதனைத் தாங்களும் ஏற்று அந்த அடிப்படையில் தீர்வு காண்பது குறித்து ஆராய்வதற்குத் தயார் என ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.மு. அரசும் அறிவித்து இணக்கம் கண்டது.

ஆனால், ரணிலின் அரசைக் கலைத்து, அந்த இடத்துக்கு ஆட்சிப்பீடத்துக்கு வந்த அமைச்சா லக்ஷ்மன் கதிர்காமர் தற்போது இடம்பெற்றிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசுதான் சமஷ்டித் தீர்வு குறித்துக் குழம்பிப் போய் நிற்கின்து. இந்த ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, அந்தக் கூட்டமைப்புக்கான மூல ஒப்பந்த வாச கத்திலேயே கூட்டமைப்பின் பங்காளிகள் இடையே தீர்வு முறை குறித்து முரண்பாடு இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளது.

சமஷ்டி முறையில் தீர்வுகாண்பதை அனுமதிக்கவே முடியாது என்று அரசுக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான ஜே.வி. பி. ஆரம்பம் முதல் கூட்டமைப்புக்கான மூல ஒப்பந்தத்தின் வாசகத்திலிருந்து அடித்துக்கூறி, அடம்பிடித்து வருகின்றது. அந்தப் பங்காளிக் கட்சியில் முற்றும் முழுதாக தங்கி ஆட்சி அமைத்திருப்பதால் அந்தக் கட்சியின் விருப்புக்கு மாறாக அந்த சமஷ்டித் தீர்வு வழியில் முயற்சியில் ஈடுபடமுடியாமல் தவிக்கிறது சந்திரிகா அரசு என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆனால், அந்த இயலாமையிலிருந்து தப்புவதற்காகக் குற்றச் சாட்டைப் புலிகள் மீது சுமத்தப் பார்க்கின்றார்.

கதிர்காமர் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கை நீண்டகாலம் பிடிக்கும் ஒரு விவகாரம் எனறும் சரடு விட்டு, அதனை உடனடியாகச் செய்ய இயலாத தனது அரசைக் காப்பாற்ற முயல்கிறார் அவர். 2001ஆம் ஆண்டு டிசெம்பர் மத்தியில் பதவியேற்ற ரணிலின் அரசினால், இரண்டு தசாப்த கால மோசமான யுத்தத்துக்கு மூன்று வருடங்களுக்குப் பின்னர் இப்போதும் கூட புதிய அரசு வந்த பின்னரும் கூட நின்று நிலைத்து நீடிக்கக்கூடிய ஒரு யுத்த நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்பாட்டை விரைந்து இரண்டு மாத காலத்துக்குள் புலிகளுடன வெற்றிகரமாகச் செய்து கொள்ள முடியுமானால் மக்களின அழிவு, அவலத்தோடு சம்பந்தப்பட்ட ஒரு பொதுப் பிரச்சினைக்கு அந்தச் சிக்கலிலிருந்து மக்களை மீட்பது தொடர்பான அவசர, அவசிய மனிதாபிமான நடவடிக்கைக்கு ஓர் இணக்க ஏற்பாட்டை அந்தப் பேரவலம் நடந்து மூன்று மாதமாகியும் ஏன் காணமுடியாமல் இருக்கின்றது? இதில் தப்பும், தவறும், பிடிவாதமும் யார் பக்கம் உள்ளன?

புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இணக்கத்துக்கு அரசு வந்தாலும் அரசிலிருந்து தாம் வெளியேறமாட்டார்கள் என்று ஜே.வி.பியினர் தன்னிடம் கூறியிருக்கின்றனர் என்றும், அவர்கள் அது தொடர்பாக வேறு எங்கோ, யாருக்கோ வேறுவிதமாகக் கூறியிருப்பதாகத் தொிவிக்கப்படு வது குறித்து அலட்டிக்கொள்ளவே தேவையில்லை என்றும் கதிர்காமர் இப்போது கூறுகின்றார்.

இது பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு விட்டால் உலகமே இருண்டுவிட்டது எனக் கருதுவது போன்றதாக இருக்கின்றது.பௌத்த, சிங்கள மேலாண்மை வாதத்தில் ஊறித் திளைத்திருக்கும் போினவாதிகளான ஜே.வி. பியினர் தங்களின் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவித்த பின்னரும், அந்தப் பங்காளிக் கட்சியின் உண்மை நிலைப்பாட்டை பி.பி.ஸி.வரை சென்று மூடிமறைக்கக் கதிர்காமா முற்படுவது அவரது அரசியல் அரைவேக்காட்டுத்தன்மையை புலப்படுத்தும் மற்றொரு சான்று அவ்வளவே! (து)

# மரம் நடுகை திட்டம் ஊடாக சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை

(தனங்கிளப்பு)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனமானது (SOND) தற்போது சூழல் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு மரம் நடுகைத் திட்டமொன்றைப் பெரியளவில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் முதற்கட்டமாக பாரிய வைரமரங்கள், பழமரங்கள், நிழல்தருமரங்கள் போன்றவற்றுக்கான கன்றுகளை வழங்கவும் நடுகை செய்யவும் தீர்மானித்துள்ளது.

இதற்கென விதைகள்,கன்றுகள் பெருமளவில் தேவைப்படுகின்றன. இதனால் சூழல் பாதுகாப்பில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் தங்களிடம் இருக்கக்கூடிய விதையினங்களை, நல்லின மரக்கன்றுகளை இலவசமாக வழங்க அல்லது விற்க விரும்பின் "சொண்ட் இல. 60 அரசடிவீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ, 021 222 6700 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறும் குறிப்பிட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. (க-37)

# அரச சார்பற்ற நிறுவனங்களும் இனிமேல் வரி செலுத்த வேண்டும்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் வரி அறவிடப்படவுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் நாட்டில் உள்ள அரச சார்பற்ற அமைப்புகளும் அரசாங்கத்திடம் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

நிதி திருத்த சட்டமூலத்தின் உள்நாட்டு வரித்திருத்த சட்டமூலம், பந்தயம் சூதாட்ட வரி திருத்தச்சட்டமூலம் என்பன தொடர்பான இரண்டாம் முறை வாசிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் முதலாந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வாகனப் பதிவின் போது பிடித்து வைத்தல் வரியொன்றையும் அமுலாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி மோட்டார் வாகனமொன்றை பதிவுசெய்து கொள்வதற்கு 5ஆயிரம் ரூபா பிடித்து வைத்தல வரி அறவிடப்படவுள்ள அதேவேளை,முச்சக்கரவண்டி, லொறி, பஸ் வண்டி என்பவற்றுக்கு இந்த வரியிலிருந்து விலக்கழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)

# நிவாரணப் பணிகளை மேற்கொள்ள இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகள்

## ஜே.தொ.நு.ஒ. நிறுவனம் 15 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளையும் ஏனைய கட்டடங்களையும் புனரமைப்பதற்கென உள்ளூரில் உள்ளோருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்காக ஜேர்மன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம் 15 மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங்கவுள்ளது.

இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் கட்டட நிர்மாணத்துறை தொடர்பான பயிற்சிகளைப் பெற்ற இளைஞர்,யுவதிகள் தெரிவு செய்யப்பட்டு இப் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறிக்காக இந் நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சித் திட்டத்திற்கு அமைய மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்து 75 இளைஞர், யுவதிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

அமைச்சரின் ஆலோசனையின் பேரில் வழங்கப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் இலங்கை தொழில்நுட்ப அதிகார சபையினால் கட்டட நிர்மாணம், குழாய் நீர் இயந்திரங்கள் பொருத்தல்,மின்சாரவியல் ஆகிய துறைகளில் பயிற்சி பெற்றவர்களே தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, மேலதிகமாக ஐந்து மாத செயன்முறைப் பயிற்சியாக சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் புனர் நிர்மாணப் பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.பயிற்சியின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மட்டக்களப்பு, திருகோணமலை,அம்பாறை, சம்மாந்துறை, பலப்பிட்டிய,தங்காலை, பொலிஅத்த கண்டி, இரத்தினபுரி,தெஹியத்த கண்டி ஆகிய தொழில்நுட்ப கல்லூரிகளில் ஒருமாத கால தொழில்நுட்பப் பாடங்களைப் பூர்த்தி செய்தவர்கள் நிர்மாணத்துறை பணிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# சந்தைமுன் வாகனங்களை நிறுத்த வேண்டாம்

(அம்பன்)

மந்திகை ஆலடிச் சந்தைக்கு முன்பாக வீதியின் இருமருங்கிலும் நிறுத்தப்படும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வியாபார வாகனங்களால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பருத்தித்துறைப் பிரதேச சபையால் வாகனங்களை நிறுத்தவேண்டாமென விளம்பரப் பலகை போடப்பட்டும் இதை மக்கள் உதாசீனம் செய்து வருகின்றனர்.

கடந்த புதனன்று ஒருவர் மோட்டார் சைக்கிளில் மோதுண்டு தலையில் காயமுற்று மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து பொலிஸார் பலதடவை எச்சரித்தும் இத்தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (7-56)

# வெடிபொருட்களுடன் முஸ்லிம் இளைஞர் கைது

(திருகோணமலை)

திருகோணமலை-இறக்காகண்டி வீதியில் 23 வயதுடைய முஸ்லிம் இளைஞரொருவர் ஜெலிக்னைட் வெடிக்குச்சுகளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்,ளார்.

உப்புவெளியைச் சேர்ந்த மீனவரான இந்த இளைஞர் டயனமைட் வைத்து மீன்பிடிப்பதற்காக இதனை எடுத்து வந்த சமயம் இறக்காகண்டி பொலிஸ் சோதனையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட அப்துல் ஜவ்பர் மொகமட் ரமீஸ் என்ற இந்த இளைஞர் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க)

# மந்துவில் வடக்கில் தீவிரமடையும் சட்டவிரோத மண் அகழ்வுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மந்துவில் வடக்கிலுள்ள வெற்றுக்காணிகளில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வுப் பணிகள் தீவிரமடைந்துள்ளதால் அப்பகுதியில சுற்றுச்சூழல் பாதுகாப்புக்குப் பெரும அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மந்துவில வடக்குவாழ் பொதுமக்கள் தென மராட்சி பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மாவட்டத்தின் பல இடங்களிலும் இருந்தும் நாளாந்தம் 50க்கு மேற்பட்ட வாகனங்களில் மணல் அகழப்பட்டு எடுத்துச்செல்லப்படுகின்றது.

இதனால் மேட்டு நிலங்கள் மற்றும் பணங் காணிகளில் பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதேசமயம், கிராமத்தின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன், மண் அகழ்வுப் பணிகளை நிறுத்துமபடி பொதுமக்களினால் மண் அகழ்வோரிடம் மனிதநேய அடிப்படையல் எடுத்துக்சொன்ன சமயங்களில் மண் அகழ்வோரால் பொதுமக்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, மந்துவில் வடக்கில் இருந்து மண் அகழ்வுப் பணிகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி யாழ். அரச அதிபர், சாவகச்சேரி பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி, சாவகச்சேரி மாவட்ட நீதிமனறப் பதிவாளர், சாவகச்சேரி பிரதேச சபை விசேட ஆணையாளர் மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஆகியோருக்கு மந்துவில் வடக்கு பொதுமக்கள் சார்பில் முறைப்பாடுகளின் பிரதிகள் அனுப்பிவைககப் பட்டுள்ளன. (க-16)

# பாதாள உலக கும்பலின் சித்திரவதை முகாம் பொலிஸாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தெமட்டகொடை பகுதியில் இயங்கிவந்த பாதாள உலகக் கும்பலின் சித்திரவதை முகாம் ஒன்றை தெமட்டகொடை குற்றத்தடுப்பு பொலிசார் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளனர்.

இதன்போது அந்த முகாமில் இருந்த 15 பாதாள உலக கோஷ்டி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டி, வத்தளை, மாபோல, வாழைத்தோட்டம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் அணமையில் தெமட்டகொடையில் படுகொலை செய்யப்பட்ட பாதாள உலகக் கோஷ்டித் தலைவனான அம்பிகாவின் சகாக்கள் எனத் தெரிய வந்துள்ளது.

தமக்கு கப்பம் தர மறுக்கும் நபர்கள் மற்றும் மாற்று பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்களை இங்கு கொண்டவந்தே இவர்கள் சித்திரவதை செய்து படுகொலை செய்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெமட்டகொடை பொலிஸ் பிரிவிறகுட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பலர் அண்மைக்காலமாக வெட்டிக கொலை செய்யப்பட்டு பல இடங்களில் போடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# வேலணை பிரதேச செயலர் பிரிவு கழகப் போட்டி முடிவு விபரங்கள்

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழுப்போட்டிகள் அனைத்தும் அண்மையில் முடிவடைந்துள்ளது.

அந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு,

ஆண்களுக்கான போட்டிகளில்,

**துடுப்பாட்டம**

முதலாமிடம் :- நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழகம்

இரண்டாமிடம்:- நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக்கழகம்

**கரப்பந்தாட்டம்**

முதலாமிடம் :-நயினாதீவு அனனை முன்னேற்ற விளையாட்டுக் கழகம்

இரண்டாமிடம் :- நயினாதீவு நாவலர் விளையாட்டுக் கழகம்

**உதைபந்தாட்டம்**

முதலாமிடம்- புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக் கழகம்

இரண்டாமிடம் :- புங்குடுதீவு அம்பாள விளையாட்டுக் கழகம்.

**எல்லே போட்டி**

முதலாமிடம்-நயினாதீவு ஞானவைரவர் விளையாட்டுக் கழகம்

இரண்டாமிடம்:- நயினாதீவு இஸ்லாம் விளையாட்டுக் கழகம்

**வலைப்பந்தாட்டம்**

முதலாமிடம்:- நயினாதீவு ஸ்ரீ அம்பிகா விளையாட்டுக் கழகம்

இரண்டாமிடம்:- நயினாதீவு கணேசா விளையாட்டுக் கழகம். (க-75)

# லஞ்ச ஊழல் ஆ.குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளன

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் செய்யப்படும் முறைப்பாடுகள் பெருமளவு குறைந்துள்ளதாக அறிவிக்கப படுகின்றது.

சென்ற வருடம், முதல் 3மாத காலத்தில் 600 முறைப்பாடுகள பெற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் இந்த வருடம் முதல் 3மாத காலத்தில் 359 முறைப்பாடுகள் மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதிலும், 300முறைப்பாடுகளில் 150 சம்பந்தமாகவே விசாரணைகளை மேற்கொள்ள முடியும். லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கென அங்கத்தவர்கள் நியமிக்கப்படாததினால் கடந்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதியில் இருந்து ஆணைககுழு முழு அளவில் செயற்படவில்லை.

இது தொடர்பாக ஆணைக்குழுவன் பேச்சாளர் தகவல் தருகையில, இதன் காரணமாக ஆணைக்குழுவின நடவடிக்கைகளில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை குறைவடைந்துள்ளது என்றார்.

இந்த ஆணைக்குழுவிற்கான அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதற்கு அவசியமான பரிநதுரைகளை செய்வது அரசியல யாப்பு மன்றத்தின் கடமையாகும். மன்றத்தினால் பரிந்துரைகப்பட்ட இருவரை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக ஜனாதிபதி ஏற்கனவே அங்கீகரித்துள்ளார்.

இருந்தபோதிலும், 3ஆவது அங்கத்தவராக அறிவிக்கப்பட்டவருக்கு எதிராக அவர் ஆட்சேபனை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7,9)

## கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடாத்தும மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று மாலை 4.30 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் மஹாராணி க.சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினராக அருணகிரி ஸ்ரீ செல்வம் கலந்துகொள்ளவுள்ள இக் கலை நிகழ்ச்சியில் பொன். சுநதரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரியும், பொன்னாலை சந்திர பரத கலாலயத்தினரின் நாட்டியாஞ்சலியும் இடம் பெறவுள்ளன. (க-9)

# பாதிப்புற்றோருக்கு வீடமைக்க காணிகள் ஒதுக்கப்படவில்லை

## அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் முறையான செயல்திட்டமொன்றை ஆரம்பிக்க வில்லையென்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் சந்திரசேன விஜய சிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினரும், சர்வதேச அமைப்புக்களும் வீடுகளை அமைப்பதற்கான நிதியுதவிகளை வழங்க விருப்பம் தெரிவித்துள்ளபோதிலும் அதற்கான காணிகள் இல்லாமையினால் வீடுகளை அமைக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

வீடுகளை இழந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்காக காணிகளைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகளை உரிய முறையில் வேகமாகவு நடைமுறைப் படுத்தத் தவறியிருப்பதினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை சமூகப் பிரச்சினையாக மாறியிருக்கின்றது.

இந்த நிலைமை எவராலும் மன்னிக்கமுடியாத ஒன்றாகும்.

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் வீடுகளை அமைக்க காணிகளை இனங்காணாமை அரசின் கையாலாகாத செயற்பாடு என்று அமைச்சர் சந்திரசேன மேலும் தெரிவித்துள்ளார். (7,8)

## மென்பந்து சுற்றுப் போட்டி

வடமராட்சி மென்பந்து துடுப்பாட்ட சங்கம் பதிவு செய்த கழகங்களுக்கிடையிலான சுற்றுப் போட்டியை நடாத்தவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் கழகங்களை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் சங்கத் தலைவரிடம் பதிவினை மேற்கொளளுமாறு வடமராட்சி மென்பந்து துடுப்பாட்டச் சங்கச் செயலாளர் ச.சுவேந்திரன் அறிவித்துள்ளார். (க-101)

## நிதியுதவி

(பொன்னாலை)

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 12 குடும்பங்களுக்கு சமுர்த்தி விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளுக்காக மானிய அடிப்படையில் நிதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்திச் செயலணிகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட சுமார் 12 குடும்பங்களுக்கே முதற்கட்டமாக இம் மானிய அடிப்படையிலான நிதி வழங்கப்பட்டிருக்கின்றது.

தெரிவு செய்யப்பட்ட இப் 12 குடும்பங்களும் விவசாயத்தை மேற்கொள்ளும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள என்பது குறிப்பிடத்தக்கது. (க-49)

# ரோந்துப் பணியில் ஈடுபடும் கலாசாரம் பேணுவோர் குழு!

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் இரவு வேளைகளில் வீதிகளில் தேவையற்ற விதத்தில் கூடிநின்று பொழுதுபோக்கும இளைஞர்களையும், தனியார் கல்வி நிலைய மாணவிகள் மீது சேட்டை புரியும் இள்ளைஞர்களையும், வீதிகளில் மதுபோதையில் நின்று பயணிகள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்போரையும் தடுத்து நிறுத்துவதற்காகச் சுமார் 10பேர் அடங்கிய குழுவொன்றினை வடமராட்சி கலாசாரம் பேணுவதற்காக வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளா ந.இன்பம் நியமித்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி குழுவினர் தீவிர ரோந்து நடவடிக்கையல் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அத்துடன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெல்லியடி பகுதியில் வெள்ளைக் கார் ஒன்றில் வந்து நடுவீதியில் நின்று பொழுது போக்கிய இளைஞர் குழுவை விசாரணைக்குக் கூட்டிச்சென்ற கலாசாரம் பேணும குழுவினர் கடுமையாக எச்சரிககை செய்து விடுதலைசெய்தனர்.

இது தொடர்பாக வடமராட்சி கலாசாரம் பேணும் குழு விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழர் கலாசாரத்தை சீரழிக்கும் விதத்தில் பெண்கள் மீதும் மாணவிகள் மீதும் வீதிகளில் நின்று சேட்டை புரியும் இளைஞர்களையும், வீதிகளில் நின்று பொழுதுபோக்கும இளைஞர்களையும், மதுபோதையில் நின்று இடையூறு விளைவிப்போரையும் மற்றும் தமிழர் கலாசாரத்தைச் சீரழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவோரையும் கடுமையாக எச்சரிக்கை செய்வதுடன் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-101)

## பயிற்சிநெறி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக நூலகத்தில் நாளை மறுதினம் நடைபெறவிருந்த நூலகமும் தகவல் விஞ்ஞானமுமடிப்போளமா - தரம் 1இல் கற்கும் யாழ்ப்பாணப்பிரிவு மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி நெறி தவிர்க்கமுடியாத காரணதத்தினால் பிற்போடப் பட்டுள்ளது. (க)

# ஹேலீஸ் நிறுவனத்துக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை?

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்குகளில் பரவியிருக்கும் ஒருவகை நோய் உருவானதற்கு காரணமான நிறுவனங்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென விவசாய அமைச்சு அறிவித்திருக்கிறது.

ஹேலீஸ் நிறுவனம் இறக்குமதி செய்த விதை உருளைக் கிழங்குகள் வெலிமடையிலும் நுவரெலியாவிலும் பயிரிடப்பட்டன.

இப் பிரதேசங்களில் பரவியிருக்கும் ஒருவகை நோய், ஹேலீஸ் நிறுவனம் இறக்குமதி செய்த விதை உருளைக் கிழங்கால் பரவியதா? என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறெனின், அந்நிறுவனத்தின் இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்து ஏற்பட்டுள்ள நட்டத்தையும் குறித்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்போவதாக விவசாய அமைச்சர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இந்நடவடிக்கை ஏனைய அமைச்சுக்களுக்கும் முன்னுதாரணமாக அமையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

# இடமாற்றம்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உடுவில் உப அலுவலக பொது நூலகத்தின் நூலகர் கே.வைகுந்தவாசன் அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேச சபை நூலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரின் இடத்திற்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது நூலக நூலகர் கணேசையா செளந்தரராஜன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. (து)

# மின்சார சபையில் பதவி வெற்றிடங்கள்

(கொழுமபு)

இலங்கை மின்சாரசபை கிழக்கு மாகாணத்தில் அடுத்துவரும் 6 ஆண்டுகளுக்குக் கடமையாற்றவென 117 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யவுள்ளது.

மின் அத்தியட்சகர் 11பேரும், படவரைஞர் ஒருவரும், ஆங்கில செயலர் 7பேரும், இலிகிதர் 16பேரும், தரவு நிரைப்படுத்தல் இலிகிதர் 4பேரும், தட்டெழுத்தாளர் சிங்களம், 3பேரும், ஆங்கிலம் 5 பேரும், களஞ்சியப்பொறுப்பாளர் ஒருவரும், அலுவலக ஊழியா 8பேரும், பட்டியல் பயிலுனர் 48 பேரும், சாரதி 19 பேரும தேவைப்படுகின்றனர்.

இந்த 117 பதவிகளுள் 12 பதவிகள ஏலவே மின்சார சபையில் பணியாற்றி விருதுபெற்றவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும்.

எஞ்சிய 105 பதவிகளும் எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை அடிப்படையில் நிரப்பப்படும்.

18 வயது தொடக்கம் 35 வயதுக்குடபட்டவர்கள் க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரண தரம், தரம் 8இல் சித்தியடைந்தவர்கள் பொருத்தமான பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டும். (க-9)

**விற்பனைக்கு**

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

**நியூ சிற்றி ரேடர்ஸ்**

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226

# தமிழரும் வரலாறும்

போரும் சமாதானமும் என்ற நூல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சமகால வரலாற்றை விரிவாக பதிவு செய்துள்ளது. இந்த நூலின் ஆசிரியரும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகருமான அன்ரன் பாலசிங்கம் சமகால வரலாறு எழுதுவதற்கு முற்றிலும் தகுதி வாய்ந்தவர்.

அவர் வரலாற்றின் சாட்சியாக மட்டும் அல்லாமல் வரலாறறின் உருவாக்கத்திலும் ஒரு காத்திரமான பங்கு வகித்து **(He is not only a witness to history but he is part of history as well)** வருபவர்.

இந்த நூல் திம்பு பேச்சு வார்த்தைகள் தொடங்கி விடுதலைப் புலிகள் இலங்கை அரசுக்கு 2003 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 அன்று சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் வரை நடைபெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது. சமகால அரசியலை இவ்வளவு விரைவாகப் பதிவு செய்து அதனை நூல் வடிவல் ஆவணப்படுத்தியது இதுவே முதல தடவை இது ஒரு சாதனை ஆகும்.

இன்று உலகில் வேறெந்த நாட்டுப் போராட்டங்களையும் விட இலங்கையில் நடைபெற்று வரும் தமிழீழ விடுதலைப் போராட்டம் அதிகளவு பதிவுகளைக் கொண்டுள்ளது. அது பற்றிய ஆவணங்கள்- நூல்கள், அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் - சுமார் ஒரு இலட்சத்தை தாண்டி விட்டதாகக் கூறப்படுகிறது. அவற்றில் சில பட்டியல் இடப்பெற்று நூல் வடிவில் கூட வெளிவந்துள்ளன. எடுத்துக்காட்டாக **Ethnic Conflict and Human Rights SriLanka – An Annotated Bibliography byKumar Rupasinghe and Berth Verstappen** என்ற நூலைக் குறிப்பிடலாம். இது 1989இல் வெளிவந்தது.

வரலாற்றைப் பதிவு செய்ய வேண்டியதின் அவசியத்தையும் அப்படிச் செய்யாமல் வட்டதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிப் பேசலாம் என நினைக்கிறேன். கடந்த 8 ஆம் திகதி எகிப்தை ஆண்ட தூதன்காமன் (**Tutankhamen B.C.** 1336-1327) பற்றி ஒரு செய்தி செய்தித்தாள்களில் வெளிவந்தது. தூதன்காமன் எகிப்தை ஆண்ட 18ஆவது வம்சத்தின் 12ஆவது அரசன் ஆவான்.

இந்த அரசன் தனது 9 ஆவது வயதில் ஆட்சிக் கட்டில் ஏறியவன். அவனது தாய் அகேநாதென அவனுக்கு 10 அகவை நடக்கும் போது இறந்து போனாள். ஆட்சி அனுபவம் இல்லாத தூதன்காமன் அங்கீசெனாமென் (**Ankhesenamen** ) என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். ஆனால் தூதன்காமன் தனது 18ஆவது அகவையில் இறந்து போனான். அவன் இவ்வளவு இளவயதில் மரணம் அடைந்ததற்குக் காரணம் அவனது எதிரிகள் அவனைக் கொலை செய்திருக்க வேண்டும் என்று இது காலவரை நம்பப்பட்டது.

ஆனால் அவனது பதப்படுத்திய உடலை (**Mummy**) இன்றைய நவீன கருவிகளைக் கொண்டு (**CT scan**) ஆராய்ந்து பார்த்ததில் அவனது மரணத்துக்குக் காரணம் கொலை அல்ல அவன் விழுந்து தனது வலது தொடை எலும்பை முறித்துக் கொண்டதுதான் எனக் கண்டு பிடித்துள்ளார்கள். உண்மையில் அவனது மரணம் முறிந்த தொடையில் நோய் தொற்றியதால்தான் ஏற்பட்டதாம்.

தூதன்காமன் எல்லாவிதத்திலும் புகழ்பெற்ற அரசன். அவனது கல்லறையை 1922 ஆம் ஆண்டு கண்டு பிடித்தவர் ஹோவாட் காட்டர் ( **Howard Carter**) என்ற பிரித்தானிய தொல்லியலாளர் ஆவார். ஏனைய கல்லறைகள் போலல்லாது இந்தக் கல்லறை கள்வர்களது கைபடாது எல்லாப் பொருட்களும் வைத்தது வைத்தபடி காணப்பட்டன. காரணம் இந்தக் கல்லறையின் வாசல் மேல் முகடு பெரிய பாறாங் கற்களால மூடப்பட்டிருந்தன.

எகிப்தியர்கள் ஒருவர் இறந்த பின்னும் அவரது வாழ்க்கை தொடரும் என நம்பினார்கள். எனவே அவர்கள் உறங்குவதற்குக் கல்லறை கட்டப்பட்டது. அரசர்களையும் பெரிய அதிகாரிகளையும் பொறுத்தளவில் அதற்கு மேல் பிரமிட் கட்டப்பட்டன. அதன் சுவர்களில் இறந்தவரைப் பற்றி சித்திர எழுத்தில் எழுதி வைத்தார்கள்.

தூதன்காமன் கல்லறைக்குள் ஏராளமான ஆடை ஆபரணங்கள், கட்டில் கதிரைகள் காணப்பட்டன. அதில் ஒன்று அந்த அரசன் அணிந்திருந்த கெட்டித் தங்கத்தினால் ஆன முகமூடியாகும்.

கல்லறைகளில் இறந்தவரது அடுத்த உலகப் பயணத்துக்குத் தேவையான பணம், நகை நட்டு, தானியம் போன்றவற்றையும் வைத்துவிடுகிறார்கள். அது மட்டுமல்லாமல் அவரைப் பற்றி ஒரு கல்வெட்டும் எழுதி வைத்து விடுகிறார்கள். அந்தக் கல்வெட்டை இறந்தவரின் புத்தகம் (**The Book of Dead**) என அழைத்தார்கள்.

அரசர்கள், அரசிகள், அரச அதிகாரிகள், செல்வந்தர்கள் மட்டுமல்லாமல் குடியானவர்களது உடல்களையும் (**Mummies**) பதமாக்கிப் பத்திரப் படுத்தி அவர்களுக்கும் கல்லறை கட்டினார்கள்.

மூவாயிரம் ஆண்டு காலத்தில் சுமார் 80 மில்லியன் (8 கோடி) மமீசை எகிப்தியர்கள் அடக்கம் செய்திருக்கிறார்கள். எகிப்தியர் கி.பி 4 ஆம் நூற்றாண்டளவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பின்னரே இப்படி இறந்த உடல்களைப் பதப்படுத்தி அடக்கம் செய்யும் பழக்கத்தைக் கைவிட்டார்கள்.

எகிப்தியர்களது நாகரிகம் (கி.மு 3100-332) மிகவும் பழமையும் புகழும் வாய்ந்தது. அதன் உயிர்நாடி நைல்நதிப் பள்ளத்தாக்கே. எகிப்திய மன்னர்கள் நைல்நதி உற்பத்தியாகும் பகுதி தொடங்கி அது மத்தியதரைக் கடலில் விழும் பகுதிகள் முழுதும் ஆட்சி செய்தார்கள். தூதன்காமனது மரணத்தின் பின்னர் ஆய் என்ற அரசன் ஆட்சிக் கட்டில் ஏறினான. அவன் இறந்த தூதன்காமனது பட்டத்து அரசியையே திருமணம் செய்து கொண்டான்.

தூதன்காமன், அங்கீசெனாமென், ஆய் என்ற பெயர்களைப் பார்த்துவிட்டு இவர்கள் கல் தோனறி மண்தோன்றாக் காலத்துக்கு முன் வாளொடு தோன்றிய மூத்தகுடியின் மூதாதையர் என்று உறவு கொண்டாட முயற்சிக்கும் தமிழர்கள் இருக்கிறார்கள்!

உலகின் மூத்த குடி தமிழர்,

# ஒரு மீள்பார்வை...

ஞாலத்தின் முதன் மொழி தமிழ் என்று மறைவாக நமக்குள்ளே பழம் கதைகள், பழம் பெருமைகள் பேசுவதிலோர் மகிமை இல்லை. அவை உண்மையென்றால் வெளிநாட்டோர் அதை ஒப்புக்கொள்ளுமாறு சான்றுகளோடு சொல்ல வேண்டும்.

தூதன்காமன் பற்றி ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் எகித்தியர்கள் அவனது உடலைப் பதப்படுத்தி 3,000 ஆண்டுகள் வைத்ததும் அல்லாமல் அவனது வரலாற்றையும் எழுதி வைத்துள்ளார்கள்.

உண்மையில் எகிப்தியர்கள் தங்கள் வரலாற்றை கி.மு 3100 ஆம் ஆண்டு தொடங்கி கி.பி 641 ஆண்டு வரை தொடர்சசியாக எழுதி வைத்திருக்கிறார்கள். அதில் பேரளவு பகுதியை எழுதியவர் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மனெதோ (**Manetho**-கி.மு 270) என்ற வரலாற்று ஆசிரியர் ஆவார். இவர் எகிப்தை ஆண்ட வம்சங்களின் எண்ணிக்கை, அரசர்களின் எண்ணிக்கை. அவர்களது பெயர்கள, அவர்களது ஆட்சிக்காலம், அவர்களது ஊர்கள், அவர்களது போர்கள் பற்றி விரிவாக எழுதி வைத்துள்ளார்.

முதலாவது வம்சம் கி.மு 3100-2890 வரை நீடித்தது. ஆண்ட மனனர்களின் எண்ணிக்கை எட்டு.

இரண்டாவது வம்சம் கி.மு 2890-2686 வரை நீடித்தது. அரசர்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும. மூன்றாவது வம்சம் கி.மு 2686 - 2613 வரை நீடித்தது. அரசர்களின் எண்ணிக்கை நான்கு.

இநத 3ஆவது வம்சம் ஐந்து நூற்றாண்டுகள் எகிப்தை ஆண்டது. இவர்களது ஆட்சியிலேயே எகிப்தியர்கள் பிரமிட் கட்ட ஆரம்பித்தார்கள். எனவே இந்தக் காலம் பிரமிட் காலம் என வர்ணிக்கப்படுகிறது.

டிஜோயர் என்ற அரசன் சாக்கரா (**Saqqara**) கல்லால் கட்டிய பிரமிட்டே ஏனைய பிரமிட்டுகளுக்கு எல்லாம் முன்னோடி. அதனை வடிவமைத்தவர் **Im hotep** என்ற கட்டிடநிபுணர், இவர் தான் முதல்தர சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு பிரமிட் கட்டியவர்.

ஆனால் உண்மையான பிரமிட் நான்காவது வம்சத்தின் முதல் அரசனான **Snefenu** காலத்தில் கட்டப்பட்டது. இவனது மகனே ஜீசாவில் உள்ள பெரிய பிரமிட்டைக் கட்டியவன். இது உலக அதிசயங்களில் ஒன்றாக எண்ணப்படுகிறது. இதைக் கட்டுவதற்கு 2,000,000 மில்லியன் (20 இலட்சம்) மிக உயர்தர சுண்ணாம்புக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றில் சில 15 தொன் எடை கொண்டது. இந்தப் பிரமிட் கட்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஒரு பகுதி கற்கள் இன்றைய கெயிரோ நகரைக் கட்டப் பயன்படுத்தப்பட்டதாம்.

பிரமட் கட்டுவது ஒரு பழைய இராச்சியத்திலும் இடைக்கால இராச்சியத்திலும் பெரிய தொழிலாகவே நடைபெற்றது. இன்று நாட்டின் வளங்கள் அனைத்தும் இப்படியான பிரமிட்டுகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படடது. மக்களின் பொருளாதாரத்துக்கு உருப்படியாக உதவாது என்று நாம் நினைத்தாலும் எகிப்தின் நாகரிக வளர்ச்சிக்கு அது உந்துசக்தியாக இருந்திருக்கிறது.

எகிப்தை ஆண்ட 30 வம்சங்களின் வரலாறு தொடர்ச்சியாக ஆண்டு வாரியாக எழுதி வைக்கப்பட்டுள்ளது.

முதல் 8 வம்சங்களது ஆட்சி பழைய இராச்சியம் (**Old Kingdom**) ஏ்ன அழைக்கப்பட்டது.

பண்டைய எகிப்தியர்கள் சில்வண்டு சாணத்தை பந்தாக உருட்டித் தள்ளிக் கொண்டு போய் நிலத்துக்குள் தாழ்ப்பதைப் பார்த்தார்கள். இது மாதிரியே சூரியனும் வானத்தில் உருட்டப்பட்டு இரவில் பாதாள லோகத்தில் தாழ்க்கப்படுவதாக நினைத்தார்கள். சில்வண்டு எகிப்திய மொழியில் கேபெரா (**Khepera**) என அழைக்கப்பட்டது. இந்தப் பெயரால் பல அரசர்கள் அழைக்கப்பட்டார்கள!

எகிபதின் 26ஆவது வம்சத்தை தொடக்கியவர் சாம்மெதிசுஸ் (**Psammethichus**) என்ற அரசன் ஆவான். இவனது ஆட்சி (கி.மு 664-525) பிந்திய கால எகிப்து நாகரிகத்தின் பொற்காலம் எனப்படுகிறது. ஆனால் பாரசீகம் எகிப்து மீது படையெடுத்ததைத் தொடர்ந்து இந்த வம்ச ஆட்சி முடிவுக்கு வந்ததோடு எகிப்து பாரசீகத்தின் ஒரு மாகாணமாகவும் இணைக்கப்பட்டது. பாரசீக சக்கரவர்த்திகள் ஆன 2ஆவது டேறியஸ் (**Darius** 11) எகிப்தின் 27ஆவது வம்சமாகக் கருதப்பட்டது. எகிப்து 28ஆவது 29ஆவது 30ஆவது வம்ச ஆட்சியின் போது மீண்டும் ஓரளவு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது. ஆனால் கி.மு 335 இல் அது மீண்டும் பாரசீகத்தால் தாக்கிப் பிடிக்கப்பட்டது.

வரலாற்றுப் புகழ் படைத்த கிரேக்க சக்கரவர்த்தி மாகா அலெக்சாந்தரைப் (**Alexander the Great**) பற்றிக் கேள்விப் படாதவர்களே இருக்க முடியாது. மகா அலெக்சாந்தர் (கி.பி 356-323) பாரசீகத்தைத் தோற்கடித்து எகிப்தைத் தனது ஆட்சிக்குள் கொண்டு வந்தான். எகிப்தியர்கள் அவனைப் பாரசீகத்திடம் இருந்து விடுவித்தவன் எனக் கொண்டாடினார்கள். அலெக்சாந்தர் எகிப்திய கடவுளரை வணங்கியதோடு பாரோ (**Pharaoh**) என்ற பட்டத்தையும் ஏற்றுக் கொண்டான். இவனே நைல்நதியின் மேற்கு கழிமுகத்தில் புகழ்பெற்ற அலெகசாந்திரியா என்ற நகரை நிர்மாணித்தவன்.

பண்டைய எகிப்து நாட்டைப பற்றி எழுதப்பட்ட 101,000 கட்டுரைகள் விலைக்கு இருப்பதாக ஒரு இணையத்தளம் தகவல் வெளியிடப்பட்டுள்ளது!

மகா அலெக்சாந்தரின் தந்தை மசிடோனியாவை ஆண்ட 2ஆவது பிலிப். தாய் பெயர் ஒலிம்பியாஸ். அலெக்சாந்தரின் ஆசிரியர் புகழ்பெற்ற கிரேக்க தத்துவவாதி அரிஸ்ரோட்டல். அலெக்சாந்தருக்கு அரிஸ்ரோட்டல் அறிவியல், மருத்துவம், இலக்கியம், பேச்சுக்கலை போன்ற கற்கை நெறிகளைப் படிப்பித்தார். □

**நன்றி நக்கீரன்**

## 2006 ஆம் ஆண்டுக்கான
# பாடப்புத்தகங்களை அனுப்ப கல்வி அமைச்சு நடவடிக்கை!

2006ஆம் ஆண்டிற்குத் தேவையான பாடபபுத்தகங்களை பாடசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

2 கோடி 20 இலட்சம் பாடப் புத்தகங்களை விநியோகிப்பதற்கு 800 கோடி ரூபா செலவாகும் என பூர்வாங்க மதிப்பீடுகள் கூறுகின்றன.

2 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட புத்தகங்கள் தேவைப்படும் பாடசாலைகளுக்கு அவற்றை நேரடியாக விநியோகிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் 4ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் தேவைப்படும் பாடசாலைகளுக்கே அவை நேரடியாக வழங்கப்பட்டன.

முன்னைய ஆண்டுகளில் 2 களஞ்சிய சாலைகள் ஊடாக புத்தகங்கள் விநியோகிக்கப் பட்டன.

ஆனால் இம்முறை ஒரே களஞ்சிய சாலையூடாக அந்தப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் இதுபற்றி வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும் விளக்கம் அளிக்கும் கூட்டங்கள் முன்கூட்டியே நடத்தப்படும் என்றும் கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பான முதற் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி அமபாறை மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது. (க-9)

# லீசிங் முறையில் வாகனங்கள்

(தென்மராட்சி)

மக்கள் வங்கியின் திட்டமாகிய பீப்பிள்ஸ் லீசிங் கமபனியின் செயல்பாடுகள் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகின்றது.

இதற்கென யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தின் கீழ் மாடியில் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் லீசிங் முறையில் வாகனங்கள் பெற்றுக் கொடுக்கப்படும் எனக் கூறப் படுகின்றது. (க-16)

# சட்டம் தூங்கும்போது நீதி விழித்திருக்க முடியுமா?

## சபையில் ஈழவேந்தன் கேள்வி

24 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் ஒருநபர் இருந்தாலே அவரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் தற்போதைய சட்டமூலத்தின்படி பொலிஸ் காவலில் 48 மணிநேரம் ஒருநபர் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவரின் உயிருக்கு உத்தரவாதமளிபபது யாரென தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. ஈழவேந்தன் சபையில் கேள்வி யெழுப்பினார்.

குற்றவியல் நடவடிக்கை சட்டகோவை திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்றபோது ஈழவேந்தன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்,

இந்த அரசாங்கம் எத்தகைய சட்டமூத்தைக் கொண்டுவந்தாலும் தமிழ் மக்களுக்கு விமோசனம் ஏற்படப்போவதில்லை. யாழ்ப்பாணத்தில் மாணவி கிருஷாந்தியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொன்றதுடன், அவரது தாயார் மற்றும் உறவினர்களைக் கொலை செய்த ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பில்லையெனக் கூறி கொழும்புக்கு கூட்டி வந்துள்ளார்கள்.

ஜனாதிபதியின் தாய் மாமனான ரதவத்தை இன்று வெளியில் சுதந்திரப் பறவையாக சுற்றித் திரிகின்றார். இவர்கள் எல்லாம் எந்த நீதிமன்றங்களினால் எந்த சட்டமூலங்களினால் தண்டிக்கப்பட்டார்கள் எனக்கேட்டார்.(து)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 18



### அத்தியாயம் VII

***கண்டித்தல்***

தன்னிலைப் பிரேரணையொன்றின் மீதன்றி, ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதி நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள ஆட்கள் ஆகியோரின் நடத்தை பற்றிப் பாராளுமன்றத்தில் வினாவெழுப்பக்கூடாதென்று நிலையியற் கட்டளை 78 வகுத்துரைக்கின்றது. "நீதி நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள ஆள்" என்பது அரசின் சட்ட அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கவில்லை. ஏனெனில் அத்தகைய ஒரு பொருள் விளக்கம் விலக்களிக்கப்படும் நோக்கெல்லையை நியாயமான எல்லைகளுக்கு அப்பால் விரிவுபடுத்திவிடும். நிலையியற் கட்டளை 78 சட்டமா அதிபரை உள்ளடக்குவதாகக் கருதப்படக்கூடாதென்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சபாநாயகர்கள் தீர்ப் பளித்துள்ளனர். எனினும் ஜனாதிபதி ஆகியோர் பதவி வகிப்பதற்கு முன்னர் அல்லது பதவி துறந்த பின்னர் அவர் களின் நடத்தை பற்றிய வினா அனுமதிக்கப்படலாம். எனவே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் முன் னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகளினதும் நடத்தை பற்றியும் கருத்துக் கூறப்படலாம். "நடத்தை" என்பது உத்தியோகபு,ர்வமற்ற நடத்தையையும் கருதவேண்டும். உயர் பதவி வகிக்கும் ஒருவரின் உத்தியோகபு,ர்வ நடத்தை சட்டபு,ர்வமான நுண்ணாய்வுக்குரிய விடயமாகும். உண்மையில் ஜனாதிபதி தமது தத்துவங்களை யும் பணிகளையும் கடமைகளையும் முறைப்படி பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், புரிவதற்கும் பாராளுமன்றத்துக்குப் பொறுப்பாயிருக்க வேண்டுமென அரசியலமைப்பின் 42 ஆவது உறுப்புரை திட்ட வட்டமாக ஏற்பாடு செய்கின்றது. முன்னாள் ஜனாதிபதிகளின் நடத்தை பற்றிய கருத்துரைகள் கடந்த காலங் களில் அனுமதிக்கப்பட்டுள்ளன. நடப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிரான கருத்துரைகள், சபாநாயகருக் கும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் முன்கூட்டி அறிவிக்கப்பட்டால் அனுமதிக்கப்படலாம். ஓர் உறுப்பின ரின் அல்லது சபையின் மாண்புக்கு இழுக்கேற்படுத்துகின்ற குறிப்புரைகள் பொது மக்களின் நலனுக்கு உகந் தவையல்லவென்றால் சபாநாயகர் அவற்றை தடை செய்யலாம். தமது தகவல் மூலத்தை வெளிப்படுத்தும்படி ஓர் உறுப்பினரை நிர்ப்பந்திக்க முடியாது. கண்டிக்கப்பட்ட ஓர் அரசாங்க சேவையாளர் தம்மில் குற்ற மில்லையென்று தெளிவுபடுத்துகின்ற கூற்றைச் சபையில் விடுக்கும்படி சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கோர லாம். ஓர் ஆவணத்திலிருந்து மேற்கோள் காட்டும்போது தன்னும் கூட நிலையியற் கட்டளை 78 இன் கீழ் பாது காக்கப்படும் ஆளின் நடத்தை பற்றிப் பேசலாகாது.

***நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதி***

உறுப்பினரெவரும் சட்ட நீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குட்பட்டுள்ள அல்லது சட்ட முடிபை எதிர்நோக்கியுள்ள எவ்விடயம் பற்றியும் குறிப்பிடலாகாது. இவ்விதி ஒத்த வகையில் வினாக்களுக்கும் ஏற்புடையது. இவ்விதிக்கான காரணம் நீதிமன்ற விளக்கத்திலுள்ள ஒரு விடயம் பற்றிப் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்படும் அபிப்பிராயங்களினால் அதற்கு ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்க்க வேண்டிய அவசியமாகும். எனினும் இவ்விதி பு,ரணமற்றதனால் நுட்பமாகத் தெரிந்தெடுத்துப் பிரயோகிக்கப்பட வேண்டும். பொதுவில் பொதுமக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த எந்தவொரு விடயத்தையும் விவாதிப்பதற்கான சுதந்திரம் பாராளுமன்றத்துக்குண்டு. நீதிமன்றத்தின் முன் முடிவுக்காகக் காத்திருக்கின்ற ஒரு விடயத்தைச் செய்திப்பத்திரிகைகள் ஆகியவற்றில் விவாதித்தலை நீதிமுறைத் தடைக்கட்டளையொன்றின் மூலம் தடுக்க முடியும். பாராளுமன்றத்தின் முன்னர் அத்தகைய விடயங்கள் விவாதிக்கப்படுதலை நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதியைப் பிரயோகிப்பதன் மூலம் மட்டும்தான் தடுக்க முடியும்.

ஒரு நீதிபதியின் முன்னருள்ள விளக்கம் அல்லது யு,ரரில்லாத நீதிமன்ற விளக்கம் தொடர்பில் நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றி விதி கண்டிப்பாகப் பிரயோகிக்கப்பட வேண்டியதில்லை. ஏனெனில் பயிற்றப்பட்ட ஒரு நீதிபதி பாராளுமன்ற விவாதமொன்றினால் தப்பெண்ணங்கள் கொள்கின்ற ஆபத்துப் பெரும்பாலும் இல்லை எனலாம். அதே சமயம் சாதாரண மனிதர்களைகக் கொண்ட யு,ரர் சபையொன்று கூடிய மாறுதலுக்குட்படக் கூடிய மனச்சாய்வுடையதாயிருக்கும். விவாதிக்கப்பட வேண்டிய விடயம் உண்மையில் நீதிமன்றத்தின் முன்னருள்ள விடயந்தானாவென்று உறுதிப்படுத்துவதிலும் கவனஞ்செலுத்த வேண்டும். மேலும் இவ்விதி நடுத் தீர்ப்புச் சபைகள், ஆணைக்குழுக்கள் மற்றும் ஏனைய தோற்றமளவிலான நீதிமுறை அதிகார சபைகள் ஆகியவற்றின் முன்னருள்ள நடவடிக்கைகளையும் உள்ளடக்குவதாக நீடிக்கப்படக்கூடாது. 1990.12.18 ஆந் தேதியன்று, நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதியின் நோக்கெல்லை மீதான தீர்ப்பொன்றை வழங்குகையில் சபாநாயகர் பின்வருமாறு கூறினார். ஒருவிடயம் பற்றி ஏதோவொரு காலத்தில் நீதிமன்றத்தின் முன்னர் சிவில் வழக்கொன்று தாக்கல் செய்யப்படலாமென்ற வெறுங்காரணத்தினால் சபையில் அவ்விடயத்தை விவாதிப்பதற்கான உரிமை தடுக்கப்படலாகாது. சபையில் விவாதிக்கும் சுதந்திரத்தைத் தடை செய்யும் நோக்குடன் தன்னும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படலாம். அவ்விடயம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவதைத் தடுக்கின்ற ஒரே நோக்கத்துக்காக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்குமாயின் இவ்விதி பிரயோகிக்கப்படலாகாது. 1996.06.07 ஆந் தேதிய தீர்ப்பு ஓர் ஆணைக்குழுவின் முன்னருள்ள விசாரணை ஒரு நீதிமுறை முடிவை எதிர்நோக்கியுள்ள ஒரு விடயமல்லவென்ற விளைவைக் கொண்டிருந்தது. விசாரணை ஆணைக் குழுக்கள் (திருத்தம்) சட்டமூலத்தின் விவாதத்தின் போது இவ்விடயம் எழுப்பப்பட்டது. எனினும் உறுப்பினர்கள் சபையின் முன்னருள்ள சட்டமூலத்துக்குத் தமது கருத்துரைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமெனச் சபாநாயகர் எச்சரித்தார். 24.09.1996, 23.09.1976இலும் பிரேரணைகள், வினாக்கள் ஆகியவற்றுக்கு நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதி ஏற்புடையதாவென்பதில் கவனஞ் செலுத்திய சபாநாயகர் அது ஏற்புடையதுதானெனத் தீர்மானித்தார்.

நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதி தனிப்பட்டவர்களின் உயிரும் சுதந்திரமும் சம்பந்தப்பட்டதான குற்றவியல் (கிரிமினல்) வழக்குகளில் மிகக் கண்டிப்பாக பிரயோகிக்கப்படவேண்டும். பிராதை அல்லது குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வதுடன் நீதிமுறை நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன. வெறுமனே "பி" அறிக்கையொன்றைத் தாக்கல் செய்தலானது விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதி பிரயோகிக்கப்படுவதற்குப் போதுமானதல்லா. வழக்கொன்று முடிவுற்றதற்கும் ஒரு மேன்முறையீடு தாக்கல் செய்யப்படுவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியும் நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதியின் கீழ் வரமாட்டாது.

இதே கோட்பாடு பாராளுமன்றக் குழுக்களின் முன்னர் முடிபை எதிர்நோக்கியுள்ள விடயங்களுக்கும் ஏற்புடையது. எனவே ஒரு குழுவின் முன்னர் முடிபை எதிர்நோக்கியுள்ள விடயங்கள் பற்றிய ஏதேனும் கேள்விகள் ஆகியனவற்றுக்கு அனுமதி மறுக்கப்படலாம். எனினும் சபாநாயகர் தமது தற்றுணிவைப் பயன்படுத்தி நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ள ஒரு விடயத்தை விவாதிப்பதற்கு அனுமதிக்கலாம்.

பாராளுமன்றத்தின் சட்டவாக்கத் திறமைக்கு நீதிமன்ற விசாரணை நிலையிலுள்ளது பற்றிய விதி ஒரு தடையாக இருக்கக் கூடுமென்பதனால் சட்டவாக்கம் தொடர்பில் இவ்விதி பிரயோகிக்கப்படலாகாது. எனினும் அத்தகைய விவாதங்களில் உறுப்பினர்கள் அப்போதைக்கு நீதிமன்றங்களின் முன்னருள்ள வழக்குகளின் நிகழ்வுகளைக் குறிப்பிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வது நல்லது.

இவ்விதியின் நோக்கெல்லையைக் கருதுகின்ற போது "சட்ட நீதிமன்றம" என்ற சொற்கள் ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், மரண விசாரணை அதிகாரியின் மன்றுகள், வெளிநாட்டு நீதிமன்றங்கள், திணைக்கள விசாரணைச் சபைகள் ஆகியவற்றை உள்ளடக்கவில்லையென்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும். இவ்விதியின் கீழான கட்டுப்பாடு நிரந்தரமானதாகவும் இருக்கமுடியாது. ஐக்கிய இராச்சியத்தில் ஒரு வழக்கின் விளக்கத்துக்கான தேதி உண்மையாகக் குறிக்கப்படுவதற்கு முன்னரும் வழக்குத் தீர்ப்புக்கும் மேன்முறையீடு தாக்கல் செய்யப்படுவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலும் அத்தகைய விடயங்கள் விவாதிக்கப்படலாமென ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரு நீதிமன்றத்தின் முடிவை விவாதிப்பதற்கு அனுமதிக்கலாமென்ற போதிலும் பெருமளவில் அதற்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை. ஜனாதிபதி மீது அரசியல் குற்றம் சுமத்துதல் தொடர்பான அரசியலமைப்பின் 38 (2) ஆம் உறுப்புரை உண்மையில் நீதிமுறை முடிவொன்றை விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது.

(தொடரும்)

# ஐரோ.பாராளுமன்றக் குழு மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவினர் அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்தக் குழுவினர் சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதுடன், அங்கு அபிவிருத்திகளையும் மேற்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணரத்னவையும் சந்தித்தனா.

பிரித்தானியப் பாராளுமன்றத்தின் அங்கத்தவரான நீனா சிசில தலைமையிலான இந்தக் குழுவில் நெதர்லாந்து ,ஜேர்மனி, அயர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஆசிய அபிவிருத்து வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்றும் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-4)

# சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து 50 பேரணிகள்

## ஐ.தே.க. நடாத்த திட்டம்

(கொழும்பு)

திட்டமிடப்பட்டு வரும் சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிராக மக்களைத் திரட்டுவதென்று ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

அண்மையில் கூடிய அந்தக் கடசியின் அரசியல் பீடம் இந்தத் தீர்மானததை எடுத்திருப்பதாக கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனிப்பட்ட தேவைக்காக கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடாத்துவது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. இதற்கெதிராக மக்களைத் திரட்டுகின்ற நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபடவிருக்கிறது.

இதற் கமைய நாடுமுழுவதும் ஐம்பதுக்கும் மேற்பட்ட எழுச்சிப் பேரணிகள் நடாத்தப்படவிருக்கின்றன.

இதேவேளை, எமக்கு ஆதரவாக வாக்களிக்கும் படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை கோரவுள்ளோம். அவர்களின் ஆதரவினைப் பெற்று நாம் பலமடைவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(7-4)

# வெளிநாட்டு நிவாரணங்களே நாட்டை கட்டியெழுப்ப உதவியது

## நிதியமைச்சின் செயலாளர் விளக்கம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீளக்கட்டியெழுபபுவதற்காக உதவி வழங்கும் நாடுகள் வழங்கிய நிவாரணஙகளே பேருதவியாக இருந்தது என நிதியமைச்சின் செயலாளர் பி.வி. ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் பெருமபின்னடைவை எதிர்நோக்கியருந்ததைச் சுட்டிக்காட்டிய அவர், சர்வதேச உதவிகள் இன்றி நாட்டின் அபிவிருத்தப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்று தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டின் தற்போதைய நிலை குறிதது கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மாநாட்டில் உரையாற்றுமபோது இவ்விடயங்களைத் தெரிவித்த அவர், அந்நேரத்தில் பாதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு வெளிநாடுகளின் உதவி அவசியமாக இருந்ததாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் முறைமைகள் குறித்து ஆராய்வதற்காக அபிவிருத்தி சம்பந்தப்பட்ட தரப்பினரோடு பேச்சுவார்த்தை நடத்த நேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் கடன் சுமையைக் குறைத்துக் கொள்வதற்காக அபிவிருத்தி நடவடிக்கைகளோடு தொடர்புடையவர்களிடம்உதவிகளைக் கோர தீர்மானத்துள்ளதாகவும் நிதியமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(க-9)

# நிரந்தர வீடுகளை வழங்குவதில் பாதிப்புற்றோருக்கு முன்னுரிமை

## ஐ.நா. விஷேட பிரதிநிதி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையின் போது காணி மற்றும் வீடுகள் வழங்குவதில் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையன் விஷேட பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள செயலாளா நாயகத்தின் பிரதிநிதி, பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வவர்ணபாலாவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார். சுனாமியின் பின்னர் மேற்கொள் ளப்படும் புனரமைப்பு செயல்திட்டத்தில் நிரந்தர வீடுகளை வழங்குவதில் இடம்பெயர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

சுனாமியினால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பாக சர்வதே சமூகத்துக்கு தெளிவுபடுத்தப்படவேணடும். அவ்வாறு செய்தால் மட்டுமே தேவையான உதவிகள் கிடைக்கும எனத் தெரிவித்த ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விஷேட பிரதிநிதி இதற்காக நாம் அமெரிக்காவின் முன்னாள ஜனாதிபதி பல்கிளின்டனுடன் இணைந்து செயற்படுவதாகவும் இந்த செயற்திட்டத்தின் முதற்கட்டமாக இன்னும் எட்டு வாரங்களில் பில்கிளினடனுடன் மீணடும் இலங்கைக்கு வர எண்ணியுள்ளோம் என்றும் தெரிவித்தார். (து-8)

# பொதுக்கொள்கை வகுக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

நாட்டின் பொது வேலைத்திட்டங்கள் தொடர்பில் பொதுக் கொள்கை வகுக்கப்படவேண்டுமென அமைச்சர் லால்காந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாகிபகி கல்வியமைச்சாாக இருககின்ற போதும் அதற்கும் தேசியக் கொள்கை இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது என்றார்.

தேசியக் கொள்கை இல்லாமை காரணமாக நாடு பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்வுதாகத் தெரிவித்த அவர்,

முக்கிய துறைகளுக்காக தேசியக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும் என்றார். (க-4)

# அஞ்சா நெஞ்சம் கொண்ட பஞ்சாப்புலி பகத்சிங்

## மெல்லக் கிளம்பும் மறைக்கப்பட்ட உண்மைகள்

ஒரு தேசத்தின் உண்மையான சரித்திரத்தை மறைப்பதற்கு எவருக்குமே உரிமையில்லை. ஆனால் நடந்த உண்மையான சரித்திரத்தைவிட மறைக்கப்பட்டு, திரிக்கப்பட்டு, உரைக்கப்பட்ட சரிததிரம் தான் இன்று எம்மிடையே அதிகமாக உள்ளது. நடந்த சரித்திரத்தை மறைக்கின்ற வழமைதான் இன்றுவரை சரித்திரமாகத் தொடர்கின்றது.

கத்தியின்றி, இரத்தமின்றிக் கிடைக்கப்பெற்ற சுதந்திரம்" என்று இந்தியா பெற்ற சுதந்திரம் குறித்து இப்போதும் பலர் கூறிவந்தாலும், 'அது திரிக்கப்பட்ட வரலாறு என்பதனை எதிர்காலம் கூறுமோ' என்ற எண்ணமும் இப்போது வலுப்பட்டு வருகின்றது. நேதாஜி சுபாஷ் சந்திர போஸில் இருந்து எத்தனையோ ஆயிரம புரட்சி வீரர்கள் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து போர் புரிந்தார்கள். உண்மையில் ஆங்கிலேய ஆதிக்கத்தின் அடித்தளத்தை இப்புரட்சி வீரர்களின் போராட்டம் தான் ஆடவைத்தது. 1857ம் ஆண்டு நடைபெற்ற, 'சிப்பாய்க்கலகம்' என்று ஆங்கில அரசு பெயரிட்டழைத்த கலகம், உண்மையில் ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டம் தான்.!

சரியாக 74 ஆண்டுகளுக்கு முன்பு- அதாவது 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 25ந்திகதி - மகாத்மா காந்தி, கராச்சி நகருக்குச் செல்கின்றார். இலட்சக் கணக்கில் மக்கள் வெள்ளம் அலை புரண்டு ஓடுகின்றது. எதற்கு? காந்தி யாரை வரவேற்கவா? இல்லை! கூட்டத்திலிருந்து இவ் வாறுதான் குரல்கள் எழும்புகின்றன.

தலைவர்களே! திரும்பிச் செல்லுங்கள்! காந்தி-ஏர்வின் (**Erwin**) ஒப்பந்தத்தை தூக்கி எறியுங்கள். பகத்சிங்கை கொன்ற பேர்வழி எங்கே? என்றெல்லாம் மக்கள் கதறுகின்றார்கள்.

அன்று மாலையில் நடந்த பெருங் கூட்டத்தில், 'காந்தி எங்களுக்கு எதற்கு? அவர் ஒழியட்டும்' என்று மக்கள்-அதிலும் குறிப்பாக இளைஞர்கள்-குரல் எழுப்புகின்றார்கள். ஏன்? என்ன காரணம்?

காரணம் என்னவென்றால், இதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர்தான், அதாவது 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதியன்றுதான், இந்திய சுதந்திரப் போராட்டவீரன் பகத்சிங் அவர்களை அவரது இரண்டு போராளி நண்பர்களான சுகதேவ், ராஜகுரு ஆகியோருடன் ஆங்கில அரசு தூக்கிலிட்டுக் கொன்றிருந்தது.

இந்தியச் சுதந்திரப் போராட்ட மாவீரன் பகத்சிங்கின் முழுமையான தியாக வரலாறு மறைக்கப்பட்டு வந்துள்ளமை குறித்தும் பரவலாக வெளிவந்திராத சம்பவங்கள் குறித்தும் ஆதாரபூர்வமாகத் தர்க்கிப்பதுவே இந்த கட்டுரையின் நோககமாகும்.

வெகுசனப் பிரசாரச் சாதனங்களை முழுமையாகத் தங்கள் கைகளில் வைத்திருந்த மேல்தட்டு இந்திய அரசியல் வாதிகள், பகத்சிங் போன்ற போராளிகளின் பங்களிப்புக்களை இயலுமான வரை மூடிமறைத்தே வந்துள்ளார்கள் என்பதற்கு இப்போது ஆவணச்சான்றுகளுடன் கருத்துக்கள் வெளிவந்துள்ளன.

இவை எல்லாவற்றையும்விட, 'பகத்சிங் அவர்களின் தூக்குத்தண்டனையை எப்போது நிறைவேற்றவேண்டும்' என்று ஆங்கில அரசிற்கு ஆலோசனை அளித்தவரே, மகாத்மா காந்திதான் என்ற விபரமுழ் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

1907ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதியன்று பஞ்சாப் மாநிலத்தில் லாகூா நகருக்கு அருகிலுள்ள லாயல்பூர் மாவட்டத்தில், பங்கா என்னும் கிராமத்தில் பகத்சிங் பிறந்தார்.

அவர் 12 வயதுச சிறுவனாக இருந்த போது, ஜாலியன்வாலா பாக் என்ற இடத்தில் ஆங்கிலேய ஜெனரலான டயர் என்பவன் நடாத்திய படு கொலைகள் சம்பவம் பகத்சிங் மனதில் விடுதலை வேட்கையை ஊட்டியது.

பல புரட்சி அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு அதற்குரிய பணிகளில் பகத்சிங் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 'இந்திய சமதர்மக் குடியரசு இராணுவம்' என்ற அமைப்பு ஒன்று 1928ம் ஆண்டுடிசம்பர் மாதம் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்பின் மத்தியகுழு உறுப்பினராக பகத்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

. இந்த அமைப்பின் முதல் இரண்டு முக்கியமான நடவடிக்கைகளில் பகத்சிங் முக்கிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டார். ஒன்று, பொலிஸ் அதிகாரி சான்டர்ஸ் என்பவரைக் கொல்வது, மற்றது சட்டசபையில் குண்டு வீசுவது. 1928ம ஆண்டு டிசம்பர் 17ம் திகதி பொலிஸ் அதிகாரி சான்டர்ஸ் சுடப்பட்ட சம்பவத்தின் பின்னர் பகத்சிங்கின் தலைமறைவு வாழ்க்கை ஆரம்பமாயிற்று. நான்கு மாதங்களுக்குப் பின்னர், மீண்டும் கட்சியின் முடிவுப்படி 8-4-1929 அன்று சட்டசபையில் குண்டுவீசும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

இதில் படுதுணிகரமான, அதேவேளை வித்தியாசமான, முடிவொன்றை பகத்சிங் எடுத்தார்.

குண்டுகளை வீசிவிட்டுத் தப்பியோடுவதைக் காட்டிலும் தாங்களே ஏகதாகச்சம்மதித்து, பிறகு நீதிமன்றங்களைத் தமது கொள்கை பரப்பும் மேடைகளாக ஆக்கிக் கொள்ள வேண்டும் - என்று பகத்சிங் முன்வைத்த கருத்தை மத்தியகுழு ஏற்றுக்கொண்டது.

பகத்சிங் அவர்களும் பட்டுகேஸ்வர் தத் என்பவரும் திட்டமிட்டபடி, 1929 ஏப்ரல் மாதம் 8ம் திகதியன்று சட்டசபையில் குண்டுகளை வீசிவிட்டு, 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று முழக்கமிட்டார்கள்.

இந்திய அரசியல் வரலாற்றில் இந்த முழக்கம் அன்றுதான் முதல் முறையாகக கேட்டது. பின்னர் கையிலிருந்த துப்பாக்கியால் மேல்நோக்கிச் சுட்டுவிட்டு, துண்டறிக்கைகளை வீசி எறிந்தார்கள். பிறகு தாங்களாகவே முன்வந்து கைதாகினார்கள்.

இன்று பகத்சிங்கைப் புகழ்ந்து எழுதுகின்ற ஆனந்தவிகடன் பத்திரிகை அன்று பகத்சிங்கின் இந்த நடவடிக்கை குறித்து என்ன எழுதியது தெரியுமா?

1929ம் ஆண்டு (அப்போது மாத இதழாக வெளிவந்த ஆனந்தவிகடனின்) மே மாத இதழில், பகத்சிங்கின் செய்கையைக் கண்டித்தும், கேலி செய்தும் வெளியான அக்கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே தருகின்றோம்.

'இரண்டு இளைஞர்கள் திடீரென எழுந்து இரண்டு அசல் வெடிகுண்டுகளை எறிந்துவிட்டு, கைத்துப்பாக்கிகளால் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார்களாம். இந்த இளைஞர்கள் இருவருக்கும் முழுமூடச்சிகாமணிகள்' என்ற பட்டத்தை விகடன் அளிக்க விரும்புகின்றான்.

முதலாவதாக, மகாத்மாவின் சத்தியாக்கிரகப் பீரங்கியினால் தகர்க்க முடியாத அதிகார வர்க்கத்தை வெங்காய வெடியினாலும், ஓட்டைத்துப்பாக்கியாலும் பயமுறுத்த அவர்கள் எண்ணியது மூடத்தனம்... இந்திய குடியரசின் சேனாதிபதி என்பதாகக் கையொப்பமிட்டு, சிரிப்பதற்கு விடயம் தந்ததின் பொருட்டு விகடன் மிகவும் நன்றி செலுத்துகின்றான்.

(ஆனந்தவிகடன்-1929 மே இதழ்)

ஆனால் பகத்சிங் அவர்களும் பட்டுகேஸ்வர்தத் அவர்களும் கொடுத்த வாக்குமூலம் வருமாறு,

'நாங்கள் வெடிகுண்டு எறிந்தோம். எந்தத் தனி நபரையும் நோக்கி நாங்கள் வெடிகுண்டு போடவில்லை. சட்டசபை பயனற்றது என்று கருதி அதன்மீது போட்டோம். சட்டசபை இருந்து என்ன பயன்? மக்கள் பிரதிநிதிகளின் முறைப்பாடுகள் அசட்டை செய்யப்படுகின்றன. சட்டசபையினால் யாதொரு நன்மையும் கிடையாது.ஏழைமக்கள் படும்துயர் சொல்லி முடியாது.

இங்கிலாந்தைக் கனவிலிருந்து தட்டி எழுப்ப வேண்டுமென்றால் வெடிகுண்டு போடவேண்டியதுதான்!... கொலை செய்யவேண்டும் என்று எண்ணியிருந்தால் அவ்விதமே செய்திருப்போம். அநீதியாக உள்ள தற்காலசமூக வாழ்வையும்,அரசியலையும் போக்குவதே புரட்சியாகும்..... ஒரு மனிதனின் நலத்தை, மற்றொருவன் பறிப்பதும் ஒரு தேசத்தின் நலத்தை மற்றொரு தேசம் பறிப்பதும் ஒழிய வேண்டும்.... நாங்கள் எச்சரிக்கை செய்துள்ளோம். இந்த எச்சரிக்கை மதிக்கப்படாமல போனால், தேசத்தில் பெரிய புரட்சி தோன்றும். அக்காலத்தை, நாம் எதிர் பார்க்கின்றோம். புரட்சி என்ற பலிபீடத்தில் எங்களது இளமையை நாங்கள் அர்ப்பணிக்கின்றோம். எத்தகைய கஷ்ட நஷ்டம் நேரினும் சரி, அதனை அனுபவிக்க நாங்கள் தயார்.

எவ்வளவு தெளிவாக, தீர்க்கமான, வீரமான வாக்குமூலம்! இந்த வீரமிகு செயலைத்தான் ஆனந்தவிகடன் பத்திரிகை கிண்டல் செய்து எழுதியது.

இந்த வழக்கின் விசாரண்ண 1929ம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் திகதி தொடங்கிற்று. பகத்சிங் உட்பட்ட இந்த வழக்கில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களின் தொகை 32. ஆங்கில அரசுக்கு ஆதரவாக குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகச் சாட்சி சொன்னவர்களின் தொகை 607. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடுவதற்கென்று ஒரு வழக்கறிஞர் கூட இல்லை.

ஆங்கில அரசுக்கு ஆதரவாகச் சாட்சி சொல்ல வந்தவர்களை அரசதரப்பு குறுக்கு விசாரணை செய்யாமலே அவர்களது சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. 1930ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7ம் திகதி தீர்ப்புக் கூறப்பட்டது.

பகத்சிங், சுகதேவர், ராஜகுரு ஆகிய மூவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது. ஏழுபேருக்கு ஆயுள் தண்டனையும் ஒருவருக்கு ஏழு ஆண்டுச் சிறைத் தண்டனையும், இன்னும் ஒருவருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டன.

7-10-1930 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பின்படி பகத்சிங் முதலான மூவருக்கும் 17-10-1930 அன்றே தூக்குத்தண்டனை நிறை வேற்றப்பட வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டிருந்தார். ஆனால், ஆங்கிலேய அரசோ இவர்களை 23-3-1931 அன்றுதான் தூக்கிலிட்டது.

இவ்வளவு காலமும் தண்டனையை நிறைவேற்றாமல் ஆங்கில அரசு இழுத்தடித்ததற்குக் காரணம், வெளிப்படையானதுதான். பகத்சிங் முதலானவர்களைத் தூக்கிலிட்டால், இந்தியா முழுவதும் எழுந்து நின்று ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகக் கலவரங்களில் ஈடுபடக்கூடும் என்ற அச்சம் அன்று அவர்களுக்கு இருந்தது. ஆனால் ஆங்கிலேயர்களின் அந்தஅச்சம் அகன்றதற்கு காரணம் யார்? அதை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள்யார்? என்பதற்கு இன்று ஆவணங்கள் சாட்சி சொல்கின்றன.

காங்கிரஸால் ஆரம்பிக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் வலுவோடு நடந்து கொண்டிருந்தது. அந்த வேளையில் அப்போராட்டத்தை நிறுத்துவதற்காக பல முயற்சிகளை ஆங்கில அரசு மேற்கொண்டு வந்தது.

அந்தவகையில் காங்கிரஸ் கட்சிக்கும் ஆங்கில அரசுக்குமிடையே ஒரு சமரச உடன்பாடு உருவானது. அது காந்தி-எர்வின் உடன்பாடு என்று அழைக்கப்பட்டது.

இந்த உடன்பாட்டை எதிர்த்து காங்கிரஸ் கட்சிக்காரர்களே குரல் எழுப்பினார்கள். காரணம், இந்த உடன்பாடு புரட்சிகரத் தோழர்களுக்கும் இயக்கங்களுக்கும் எதிரான பல செய்திகளைத் தன்னுள் கொண்டிருந்தது.

பிரிட்டிஷ் அரசின்கை ஓங்கியதும், புரட்சிகர நடவ டிக்கைகள் வரலாற்றில் மறைக்கப்பட்டதும் இந்த உடன்பாட்டிற்குப் பின்புதான்.இந்த காந்தி-எர்வின் உடன்பாடு காங்கிரசின் பல தலைவர்களுக்கும் சம் பந்தமில்லாமல் இருந்தது. இந்த உடன்பாட்டில் மற்ற அனைவரையும் விட காந்திதான் அதிக ஆர்வம் காட்டினார் என்று காந்தியின் சீடரான பட்டாபி சீதாராமையா எழுதியுள்ளார்.

'இந்த உடன்பாட்டில் உள்ள நிலச் சீர்திருத்தக் கொள்கை குறித்து வல்லபாய் பட்டேலுக்குத் திருப்தியில்லை என்றும், சட்டம் பற்றிய பகுதியில், ஜவகர்லால் நேருவுக்குத் திருப்தியில்லை என்றும்,

சிறைக்கைதிகளின் விடுதலை பற்றிய பகுதியில் யாருக்குமே திருப்தியில்லை!" என்றும் அந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாருக்குமே திருப்தி தராத அந்தப் பகுதி காந்தி-எர்வின் உடன்படிக்கையின் பகுதிவருமாறு.

**"Soldiers and police convicted of offences involving disobedience of orders.**

**(in the very few cases that have occurred) will not come within the scope of amnesty.")**

அதாவது காங்கிரசால் நடாத்தப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றமிகச் சில பொலிசார் மீதும், ராணுவத்தினர் மீதும் அரசாங்கத்தால் எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையை, இந்த உடன்படிக்கை கட்டுப்படுத்தாது என்பதே இப்பகுதி உணர்த்தும் பொருளாகும்.

இந்த ஒப்பந்தம் 1931ம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் திகதி கையெழுத்திடப்பட்ட பின்பு 28ம் திகதியளவில் கராச்சியில் காங்கிரஸ் மகாநாடு நடைபெற இருந்தது. இந்த இடைவெளியில் திரை மறைவில் நடைபெற்ற விடயங்கள் பல.

1929ம் ஆண்டு ஏப்பிரல் 8ம் திகதியன்று சட்டசபை வெடி குண்டுச் சம்பவம் நடைபெற்றபோது பகதசிங் மக்களிடையே புகழ்பெற்றவராக இல்லை. ஆனால் 1931ம் ஆண்டுக்குள் பகத் சிங்கின் புகழ் உச்சநிலையை அடைந்தது. இந்தியா முழுவதும் பாமர மக்களிடையே கூட பகத்சிங் பற்றிய வீரக்கதைகள் பேசப்பட்டன.

அந்த நேரத்தில் காந்தியின் புகழ் அளவிற்கு பகத்சிங் இணையாக புகழ் பெற்றிருந்தார் என்று காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ வரலாற்று ஆசிரியரான பட்டாபி சீதாராமையா குறிப்பிடுகின்றார்.

இந்த நிலையில் பகத்சிங்கின் புகழைக் கண்டு ஆங்கில அரசாங்கமே கலங்கி நின்றது. பகத்சிங்கின் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படா மல் இருந்தது. இந்த வேளையில்தான் காந்தி-எர்வின் உடன்படிக்கை கைச்சாத்திடப படுகின்றது.

காந்தி-எர்வின் ஒப்பந் தம் கையெழுத்தாகி விட்டாலும் 'பகத் சிங்கின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தாலேயன்றி, மார்ச் மாத இறுதியில் கராச்சியில் கூடவிருக்கும் காங்கிரஸ் மாநாடு ஒப்பந்தத்தை ஏற்காமல் போகும் வாய்ப்புகள் தென்படுகின்றன' என்று இரகசியப் புலனாய்வுத்துறை, எர்வின் பிரபுவின் செயலாளரான எமர்சன் என்பவருக்கு குறிப்பு அனுப்பியது. ஆதாரம் (**NAI-FILE NO.HOME/ POLL 4/21/1931 (P.27)(1)**இந்தச்சூழலை நன்கு விளக்கி எர்வின பிரபுவின் செயலாளரான எமர்சன் 15-3-1931 அன்று காந்திக்கு ஒரு கடிதத்தை எழுதுகின்றார். பகத்சிங்கை, கராச்சி காங்கிரசுக்கு முன்பாகவே தூக் கில் போட்டு விடுவது குறித்து அக்கடி தத்தில கருத்துக் கேட்கப்பட்டுள்ளது. (தொடரும்)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தில் பயங்கர தீ விபத்து – 14 பேர் பலி



அமெரிக்காவில் டெக்சாஸ் நகரில் தீ விபத்துக்குள்ளான எண்ணெய் சுத்திகரிப் பாலையில் தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்காவில் பிரபல எண்ணெய சுத்திகரிப்பு தொழிற் சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 14பேர் கருகிப் பலியாயினா். 70க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள டெக்சாஸ் நகரில் உளள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் நேற்று முன்தினம் திடீரென வெடிவிபத்து ஏறபட்டு பயங்கரமாகத் தீ பரவியது.

இந்த விபத்தில் 14பேர் பலியாயினர். 70க்கும் அதிகமானவர்கள் தீக்காயம் அடைந்துள்ளனர். ஏராளமான தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டுளளனா். தீவிபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.

எனினும இந்தச் சம்பவத்தக்கு தீவிரவாதம் காரணமல்ல என பொலிஸார் தெரிவித்துள்ளனர். லண்டனைச் சேர்ந்த இந்நிறுவனம் அமெரிக்காவின் எண்ணெய் தேவையில் மூன்று சதவீதத்தை பூர்த்திசெய்து வருகிறது. தீ விபத்தில் மேலும் பலர் பலியாக வாய்ப்பில்லை என இந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (து)

## சூரிய குடும்பத்துக்கு வெளியே இரு கோள்கள்




சூரிய குடும்பத்துக்கு வெளியே இரு கோள்கள் இருப்பதை நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். இவ்விரு கோள்களும் 4 நாட்களில் தங்களுடைய 'சூரியனை' வேகமாக சுற்றிவிடும். இவை இரண்டும் நூற்றுக்கணக்கான ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளன. சூரிய குடும்பத்துக்கு வெளியே இதுவரை 100க்கும் அதிகமான கோள்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், இப்போதுதான் நேரடியாக இவ்விரு கோள்களிலிருந்து விஞ்ஞானிகள் ஒளியை பெற்றுள்ளனர்.

WORLD NEWS உலக தரிசனம்

# பலுசிஸ்தான் கலவரம்; இந்தியா கவலை

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தானில் ஏற்பட்ட கலவரத்தில் 25போ இறந்தனர். இதுகுறித்து இந்தியா பெரும் கவலை தெரிவித்துள்ளது.

மாநிலங்களவையில் பா.ஜ.க எதிர்க்கட்சித் தலைவர் ஜஸ்வந்த் சிங் பேசும்போது, அங்கு 25பேர் இறந்துள்ளனர் என்றும் பலுசிஸ்தான் புனித ஸ்தலம் ஒன்றும் சேதமடைந்துள்ளது என்றும் இதனால இந்தியாவில் இருந்து பக்தர்கள் அந்தக் கோயிலுக்குச் செல்ல முடியவிலலை என்றும் வெளியுறவுத்துறை இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

இதற்கு நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுரேஷ் பச்சூரி, உறுப்பினரின் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். இது மிகவும் ஆபத்தான, உணர்வுபூர்வமான பிரச்சினை.

இதுகுறித்த முழுமையான தகவல்கள் தெரியவில்லை. இருப்பினும் இது பாகிஸ்தானின் உள நாட்டு விவகாரம். உள்ளூர் ஆதிவாசிகளுக்கும் பாதுகாப்புப்படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணம் என்று தகவல்கள் கிடைத்துள்ளன என்றார். (து)




சங்கரராமன் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை நகல் பெறுவதற்காக சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர், விஜயேந்திரா ஆகியோர் காஞ்சிபுரம் கோர்ட்டுக்கு வருகை தந்த காட்சி.

# பெண்களாக மாறிய ஆண்கள்



அறுவைச் சிகிச்சையின் மூலம் ஆண் பெணணாக மாறும் கூத்து வெளிநாடுகளில் சகஜம்.

இதேபோன்று தென்கொரியா நாட்டில் இரண்டு ஆண்கள் பெண்களாக மாறிவிட்டனர். இவர்கள் தங்களது பெயரையும் சினி, யுனா என்று பெண்கள் பெயராக மாற்றி விட்டனர்.

தற்போது இவர்கள் இருவரும் இணைந்து 'லேடி' என்ற பெயரில் இசைக்குழு ஒன்றை தொடங்கி உள்ளனர். ஆணிலிருந்து பெண்ணாக மாறியவர்கள் தொடங்கிய முதல் இசைக்குழு இது தானாம். இந்த இசைக்குழு சார்பில் எதிர்வரும் 31ஆம் திகதி ஆல்பம் வெளியிடப்படவுள்ளது. (து)

# கிர்கிஸ்தானில் கலவரம் அதிபர் தப்பி ஓட்டம்

மக்கள் போராட்டம் வலுத்ததால் கிர்கிஸ்தான் அதிபர் அஸ்கர் அகாயேவ் பதவியை இராஜினாமாச் செய்து நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தார்.

சோவியத் யூனியன் உடைந்தபின், கடந்த 1991ஆம் ஆண்டு தனிநாடாக உருவெடுத்தது கிர்கிஸ்தான். இதன் அதிபர் அஸ்கர் அகாயேவ். இவருக்கு எதிராக செயல்பட்ட துணை அதிபர் பெலிகஸ் குலோவை ஊழல் குற்றம் சாட்டி சிறையில் அடைத்தார் அதிபர்.

இதற்கிடையே, கடந்த 13 ஆம திகதி பார்லிமெண்ட் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது. அதிபர் அகாயேவுக்கு எதிராக மக்கள் வெகுண்டு எழுந்தனர்.

கடந்த சில நாட்களாக தலைநகா பஷ்கேக்கில் தொடர் போராட்டம் நடந்துவந்தது. போராட்டக்காரர்கள் நேற்று முன்தினம் அதிபர் மாளிகையை முற்றுகையிட்டனா். ரீ.வி நிலையத்தையும மக்கள் கைப்பற்றினர்.

கடந்த 2000ஆம் ஆண்டு முதல் சிறையில் இருந்த துணை அதிபர் பெலிக்ஸ் குலோவை விடுவித்தனர். மக்களின் போராட்டம் எல்லை கடந்துவிட்டதை உணர்ந்த அதிபர் அஸ்கர் அகாயேவ், பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்து தனது குடும்பத்துடன் ஹெலிகொப்டர் மூலம் அண்டை நாடான கசகஸ்தானில் தஞ்சம் புகுந்தார். (து)

# திடீர் தாக்குதலில் தலிபான் தளபதி உட்பட பலர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான படைகளுக்கும் தலிபான்களுக்கும் இடையே நடந்த சண்டையில் பலர் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின் 18ஆயிரம் அமெரிக்க வீரர்களும், நேட்டோ நாடுகளைச் சேர்ந்த 8ஆயிரத் 500 வீரர்களும் அமைதிப் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். இந்த வீரர்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து நேற்றுமுன்தினம் பக்டிகா மாகாணத்தில் ஒளிந்திருந்த தலிபான்கள் மீது அமெரிக்க படையினரும், ஆப்கான் படையினரும் சேர்ந்து தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் தலிபான் தளபதி ராஸ் முகமது உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டனர். அப்பாவிக் குழந்தைகள் இரண்டு போரும் ஒரு பெண்ணும் தாக்குதலில் பலியாயினர்.

தலைநகர் காபூலில் நடந்த மற்றொரு தாக்குதலில் ஒரு குழந்தையும், பெண்ணும் பலியாயினர்.

பாகிஸ்தான் எல்லையிலுள்ள கோஸ்ட் மாகாணத்தில் அமெரிக்க விமானங்களின் தாக்குதல்ல் ஐந்து தலிபான்கள கொலலபபட்டனர்.

சுனார் மாகாணத்தில் நடந்த சண்டையில் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான். (து)



சனாவைச் சேர்ந்த டாய் யூஜின தனது 14ஆவது வயதிலிருந்து 26 ஆ-ண்டுகளாகக் கூந்தலை வெட்டாமல் 4.2 மீற்றர் நீளத்திற்கு வளர்த்துள்ளார்.

# சீனாவில் 36கோடி பேர் குடிநீர் இன்றி தவிப்பு

(பெய்ஜிங்)

சீனாவில் 36கோடி பேர் குடிநீர் இன்றித் தவிப்பதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

சீனாவின் கிராமப் புறங்களில் 36கோடி மக்கள் பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் தவிக்கிறார்கள். நகர்ப்புறங்களிலும் நல்ல குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுவருகிறது. இதனால் கடும் நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பாதுகாப்பான குடிநீா வினியோகத்துக்கு முன்னுரிமை அளித்து ஏராளமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

அங்கு நாடு முழுவதும் உள்ள 175 ஆற்றுப்படுகைகளில 47சதவீத அளவு நீர்தான குடிக்க ஏற்றதாக உள்ளது. 52 பெரிய ஏரிகளில் பாதிக்கு மேற்பட்டவை மிகவும் அசுத்தம நிறைந்துள்ளன.

100 நகரங்களில் பாதிக்கு மேல் குடிநீா பற்றாக்குறையால பாதிக்கும் அபாயம் உள்ளது. இவ்வாறு அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. (து)



பாலியல் வழக்கு விசாரணைக்காக கலிபோர்னியா கோர்ட்டில் பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் ஆஜரானார்.

# இராமநாதன் நுண்கலைக் கழகத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவரின் விபரம்!

இராமநாதன் நுண்கலைக் கழக பட்டப்படிப்பு கல்வியாண்டு 2004/2005 வாய்ப்பாட்டு, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய துறைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விபரங்கள் கீழே தரப்படுகினறன. இவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக பல்கழலைக்கழகத்தில பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### வாய்ப்பாட்டு சங்கீதம்

அபிஷினி - சுதந்திரன், அனித்தா- தியாகராசா, அனுஷா-தங்கவேலாயுதம், அனுஷியா-ஆறுமுகம், ஆர்த்திகா-கருணாநிதி, அஸ்வினி-மோகன், பாமிலா-செல்லத்துரை, பிருந்தா-குமாரசாமி, சந்திரலதா-இருதயராசா, டிலுக்ஸ்-அந்தோனிப்பிள்ளை, ஈஸ்வரி-தெய்வமனோகர், யமுனா-கிருபாகரன், ஜனனி-இராசதுரை, ஜனனி-ஜெயக்கொடி, ஜெகஜனனி-குனதாஸ், ஜெகதா-திரியம்பமூர்த்தி, ஜெயகௌரி-செல்வம, ஜெயப்பிரதா-மாணிக்கவாசகர், கலைவாணி-தெய்வேந்திரம், கலைவாணி-சிவசம்பு, யசோதரன்-காண்டீபன், கவிதா-சிவபாலசுந்தரம், கீர்த்திகா-வடிவேல், கிருத்தியா-நடராசா, கோகிலவதனி-நவரத்தினராசா, கோகுலப்பிரியா-கோவிந்தசாமி, கோமதி-தம்பித்துரை, லதாங்கினி-ரவீந்திரன், மகீதா-மோகனதாசன், மகிஷா- தனபாலசிங்கம், மேரிஆன்ஹில்டா-ஜெகநாதன், மயூரி-விவேகானந்தன், மென்சுயா-ராஜலிங்கம், நந்தினிதேவி-துரைராஜா, நிரோசனா-குலேந்திரராஜா, நிரோஷினி-மகேந்திரா, சிவநாதன்- பிரதீபன், பிரியதர்சினி-இந்திரராசா, பிரியதர்சினி-இராஜேந்திரம், ரசிதா-இராசரத்தினம், சரண்யா-ஆனந்தபிரசாத், சிந்துலா-சொக்கலிங்கம்.

சிவநந்தினி-ஜெயதிஸ்ஸ, சிவவதனி-தர்மலிங்கம, சுபாஜினி-குமாரசாமி, சுகன்யா-புலேந்திரகுமார், சுகன்யா-மனோகரன், தனுஷா-குணபாலசிங்கம், தாரணி-குலசிங்கம், தர்ஸா-சிவானந்தம், முருகையா-துஷ்யந்தன், தோமிலா-தேவராசா, தங்கராசா-வாகீசன், வஜீரா-முத்துராஜா, வளர்மதி-மருதபபு, விஜிதா-சதாசிவம், விக்னேஸ்வரி-விருதகிரி குருக்கள், விஜிதலோஜினி-தங்கராசா, யாழினி-கனகேஸ்வரன், யுவரஞ்சினி-கனகசுந்தரம்.

### பண்ணிசை

பிருந்தா-திருபாலசிங்கம்,

### மிருதங்கம்

துரைசாமி-பகிரதன்

### வயலின்

பிரவீனா-ஆனந்தகுமாரசாமி, பிரதுஷா-யோகநாதன், விஜயயாசினி கணேசமூர்த்தி.

### நடனம்

அகலபானு-ஜெகநாதன்,அஜந்தாகினி-தெய்வேந்திரம், அனோமிலா-கனகரத்தினம், அனுஷியா-வைத்திலிங்கம், பக்தகௌரி-முதுமாரன், டொன்பக்ஷா ஜோர்ஜ-வாஷிங்டன், இரோசினி-மாரிமுத்து, அருந்தஷா- சதாசிவம, காயத்திரி-இராசரத்தினம், கீதாஞ்சலி-சிறிலிங்கம், கௌசிகா-கமலநாதன், கிருத்திகா-நந்தகுமாரக் குருக்கள், ஜெயசீலா-பாலசுபபிரமணியம்.

ஜெயதாரிணி-யோகராஜா, யூலியற் செபரீனா-சிரில் யோசவ், கல்பனா-கோபாலகிருஷ்ணன், கீதா-குமாரவேலு, லோகிதா-சிவசுப்பிரமணியம், லுமென்டா-அனரன் குலசேகரம், மேரி அஜிவினி, யோசப் அருளானந்தம், மதனிகா-கந்தசாமி, மீரா-குகமூர்த்தி, நவகீதா-நித்தியானந்தன், நிலுக்ஷனா-யேசுதாசன்பாலா, நிரஞ்சனி-தேசிங்கராஜா, நிஷாந்தினி- பரமசிங்கம், ரம்யா-நாகேநதிரம், சியாமினி-கணேஸ்வரன், இந்து நடேசபிள்ளை, சிந்துஜா- ரத்னராஜசிங்கம், சியாமளா-மதிவண்ணன், சுமங்கலை குலசேகரம், சுதர்சினி-லூர்த்துநாதன், தாமினீ- எட்வேட்பிரேமகுமாரன், தாரகி-தட்சணாமூர்ததி, தர்சிகா-செல்லராஜா, துஷா-ஜெயபாலகிருஷ்ணன், விமலினி-விஜிதவிமலராஜா, வினோதினி-வினாயகமூர்த்தி, விதுஷா-இரத்தினம்.

### சித்திரமும் வடிவமைப்பும்

யேசுதாசன்-அந்தோனிதாஸ்டலிமா-சிவலோகநாதன், ஐங்கரன்-சிறிதேவி பாலகிருஷ்ணன், ஜனானநதன்-கயூரன், சிவஞானம்-ஞானேந்திரன், சட்டநாதர்-கோபிதன், செந்தூரா-ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவபாலன்-ஜெயகாந்தன், கோபாலபிள்ளை-ஜெயப்பிரகாஷ், ஆறுமுகம்-ஜெயராஜன், அனுஷியா-ஜோண்பாப்திஸ்ட், அல்ராட்-ஜோன்சன்-ஆனந்த தீபன், தர்சினி-கனகராஜா, மகேஸ்வரன்-காண்டீபன், சிவஞானம்-கதாரதன், உதயகுமார்-கோகுலன், குணசிங்கம்-கோபிநாத், சின்னத்துரை-லதீபன், அமிர்தலிங்கம்-லிங்கேசன், சின்னையா-லோகேஸ்வரன், பாக்கியதுரை-மனோகரன், பாலசுப்பிரமணியம்-மயூரன், முருகையா-நிஷாலினி, இரத்தினசிங்கம்-பார்த்தீபன், மகேந்திரன்-பிரேம்நாத்.

பஞ்சநாதன-ராகுலன், துஷிதா-ராஜேநதிரம், நற்குணம்-ரமணன், பாஸ்கரன்-ராசுதன், ஜனனி-செல்வநாதன், ஜீன் சார்மினி-செல்வராஜா, மார்க்கண்டு-செல்லதாஸ், நடராசா-சிவகுமாரன், புண்ணியமூர்த்தி-சிவசங்கர், வேலாயுதம்-சிறிகாந்த், கந்தசாமி-சிறிரமணன், கதிர்காமநாதன்-சுதர்சினி, மரியஞானசீலன-சுதட்சன், கதிர்காமநாதன்-தனஞ்சயன், அழகையா-தவரூபன், துஜிபா-துரைரத்தினம், ரஜிதா-வைகுந்தலாகன், சுந்தரமூர்த்தி-விஜயபாலன், ஜஸ்மின் கார்மிலா-சேவியா, ஜெயதர்சினி-கந்தையா சணமுக நாதன்-கஜேந்திரன், அரியதவம், மனோகரன், சிவலிங்கம்-கஜந்தன், நடராசா-புலேந்திரகுமார்.

(து)

# ஒலி, ஒளி ஊடகங்கள் மூலமாக தமிழைப் பாதுகாக்க வேண்டும்

## தே.தி.கூ.தா.பணிப்பாளர் கருத்து

ஒலி, ஒளி ஊடகக்கதினூடாக தமிழ் மக்களின வாழ்வு ஆவணப்படுதப்படுவதுடன, தமிழ் மொழியைப் பாதுகாக்கும் இயக்கம் திரைப்படத்தினூடாக வெளிககொணரப்படவேண்டும் என தேசிய திரைப்படக் கூட்டுததாபனப் பணிப்பாளர் க.தேவதாசன் தெரிவித்திருக்கிறார்.

கடந்த வாரம் யாழ்.மாவட்டத்தில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாறறும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் க.தேவதாசன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தே.தி.கூ.தபானம் இதுவரை காலமும் தனிச் சிங்களத்திலேயே இயங்கி வந்தது. தமிழ்ப் பிரிவு அங்கு உருவாக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் முதற்கூட்டம் இதுவாகும்.

மககளும் அரச நிர்வாகமும் இணைந்த செயற்திட்டமாக இது முன்னெடுக்கப்படும். ஆவணப்படுத்தல் எமது இனத்தின் பெரும் குறைபாடாக இருந்து வருகிறது.

திரைப்படத்திற்குரிய சக்தியைக்கொண்டு எமது வரலாறு ஒளியால் எழுதப்படவேண்டும்.

இருநூறு பேர் கொண்ட திரையரங்குகளைக் கிராம ரீதியாக உருவாக்குவதன் மூலம் நல்ல படங்கள் மக்களைச் சென்றடையச் செய்யமுடியும. தமிழ் கலை இலக்கியம் முன்பு போன்று இன்று இல்லை தமிழின் வளர்ச்சியே பாதிக்கப்பட்டிருக்கின்றது. நாம் எமது வரலாற்றைச் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். மொழியைப் பாதுகாக்கும் இயக்கம் திரைப்படத்தினூடாக முன்னுக்கு வரவேண்டும்.

நல்ல படங்களை யாழ்பபாணத்தில் பெறமுடியாதுள்ளது. செயலகம் மூலமாக அவ்வாறானதொரு செயற்திட்டத்தை தே.தி.கூ.தபானம் மேற்கொள்ளும் தேசியக் கலைகள் சினிமாவின் ஊடாக வளர்த்தெடுக்கப்படவேண்டும. தமிழ்-சிங்கள படங்களின் மூலம் மக்கள் மததியல் நிலைமையைப் புரியவைத்து நாட்டின இனப்பிரச்சினையைக் கூட தீர்த்துவைக்க முடியும் என்றார்.

பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் 'சலன சித்திரம்' சார்பில் சட்டத்தரணி பொன் பூலோகசிங்கம், எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி, வி.எஸ்.சிவநேசன், சி.விவனா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இறுதியில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை விளக்கும் வீடியோ நாடாவும் காண்பிக்கப்பட்டது. (7)

### "அஹஸ் கவ்வ" வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ.பல்கலைக்கழக திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் தர்மசேன பத்திராஜவின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட "அஹஸ் கவ்வ" (ஆகாய கங்கை) எனும் சிங்களத் திரைப்படம் ஆங்கிலத் துணைத்தலைப்புக்களுடன் வீடியோக் காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படககாட்சியின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராசனின் வழிநடத்தலின் கீழ் காண்பித்த படம்பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் வருகைதந்து பயன்பெற முடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (7)

# செய்தித் துளிகள்

### விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் போதனைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திருநெல்வேலி சத்ய சாயி சேவா நிலைய மண்டபத்தில் 4.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை நடைபெறவுள்ளது.

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரபாடசாலையில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய அங்கத்தவர்கள தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(க-9)

### ஏலவிற்பனை

(கற்கோவளம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தினால் சான்றுப் பொருட்களாகப் பாரப்படுத்தப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டவையும் மற்றும் உரிமை கோரப்படாத பஜாஜ் ஆட்டோ, யமஹா மோட்டார் சைக்கிள், கண்டர் வாகனம் ஆகியன எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி காலை 10.00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளது.

(து-104)

### பாலிநகர் சந்தையில் புதிய கடைத்தொகுதி

மாந்தை கிழக்கு, பிரதேச சபையினரால் பாலிநகரில், மாதிரிச் சந்தை ஒன்றினையும், சந்தை நிரந்தர கடைத் தொகுதி ஒன்றினையும், அமைப்பதறகு பிரதேச சபையினருக்கு, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி மூலம் பாலிநகர் சந்தையில் மேலதிகமாக மீன் சந்தை, இறைச்சிக்கடை, 04 அறைகள் கொண்ட கடைத் தொகுதி, கிணறு, மலசலகூடம் என்பவை அமைக்கப்படவுள்ளதாக் சபையின் விசேட ஆணையாளர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, தெரிவித்தார்.

(து-128)

### புதிய நிர்வாகம் தெரிவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தனியார் சிற்றூர்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டம் ஞாயிற்றுககிழமை பி.ப 4 மணிக்கு யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்தி சங்க அலுவலகதததில் பொ.கெங்காதரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தலைவர்:- க.அரியரெட்ண, உபதலைவர்:- பா.வாகீசன், செயலாளர்:- சி.வருணன், உப செயலாளர்:- த.ஜீவகுமார், நிர்வாக உறுப்பினர்களாக:- இ.சிவராசன், பூ.வசீகரன், பா.பகீரதன், ஆ.பொன்னம்பலம் ஆகியோா தெரிவு செய்யப்பட்டனர். (து-126)

### பங்குனி குளிர்த்தி உற்சவம்

மந்திகை கண்ணகை அம்மன ஆலயத்தில் பங்குனி குளிர்த்தி உற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை விஷேட அபிஷேகங்கள் நடைபெற்று பகல் 1 மணியளவில் விஷேட பூசைகள் நடைபெறும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

(க-35)

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சேவி கண்ணாடித் தொழிற்சாலையின் பாதிக்கப்பட்டோர் ஊழியர்களின் பொது அமைப்பின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு நீர்வேலி கநதசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டதததில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(க-9)

### நிர்வாகிகள் தெரிவு

(துன்னாலை)

சிகை அலங்கரிப்பு ஒன்றியத்தின் 2005 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்றது.

புதிய நிர்வாகத்தில் தலைவராக ரகுவும் செயலாளராக நாகராஜாவும், பொருளாளராக வரதனும தெரிவுசெய்யப்பட்டதுடன் யாழ். மாவட்டத்திலுள்ள கிளைச சங்கங்களில் 7 இல் இருந்தும் தலா ஒருவர் வீதம் ஏழுபேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-101)

### "உமது ஆவியை அனுப்பி உலகின் முகத்தைப் புதுப்பிப்பீர்"



மீட்பின் வரலாறு மீண்டும் அரங்கேறுகிறது. அடிமைத்தளை யிலிருந்து உரிமை வாழ்வுக்கு இஸ்ரேயல் மக்கள கடந்து செல்கிறார்கள். சாவிலிருந்து வாழ்வுக்கு கிறிஸ்து கடந்து செல்கிறார்.

#### தவக்காலச் சிந்தனை

இருளிலிருந்து ஒளிக்கு நாமும கடந்துசெல்ல வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறது பாஸ்கா திருவழிபடு. ஒளியாம கிறிஸ்து உயிர்த்தெழுந்து, உயிர்ப்பின் மக்களாக நாமும் வாழ அழைககிறார். வறுமை என்னும் இருளிலிருந்து வளமை என்னும் ஒளிக்கும்; கல்லாமை என்னும் இருளிலிருந்து அறிவொளிககும்; இல்லாமை என்னும் இருளிலிருந்து செழுமை என்னும் ஒளிக்கும்; இயலாமை என்னும் இருளிலிருந்து வெற்றி என்னும் ஒளிக்கும்; சாதி என் னும் இருளிலிருந்து சகோதரத்துவம் என்னும் ஒளிக்கும்; சுயநலம் என்னும் இருளிலிருந்து பிறர் நலம் என்னும் ஒளிக்கும்; பேராசை என்னும் இருளிலிருந்து பகிர்தல என்னும் ஒளிக்கும்; சமூக விலங் கொடித்து உரிமை வாழ்வுக்கு கடந்து செல்ல இந்த பாஸ்கா திருவிழா அழைக்கிறது.

காவலன்

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல் - குறள்

வலம்புரி

## இலவசப் பாடப் புத்தக விநியோகத்தில் சீர்குலைவு

இலவசக் கல்வியால் மக்களின் கல்வி அறிவு வீதம் உயர்கிறது என்ற கருத்து ஏற்புடையதே. எனினும், இலவசம் என்பதற்காக அதில் ஏற்படக்கூடிய தாமதங்கள் மாணவர்களின் கல்வி அறிவை மழுங்கடித்துவிடும். இந்த உண்மையை அரசு உணராத வரை "இலவசக் கல்வி" ஏனாதானோ என்ற பாதையிலேயே பயணிக்க நேரிடும்.

ஆம். 2005 ஆம் ஆண்டின் முதலாம் தவணைக் காலம் முடிவடையும் நிலையில், இன்னமும் சில பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறு மாணவர்களுக்கான பாடப் புத்தக விநியோகம், அதிலும் குறிப்பாக தமிழ் மொழி மூல பாடநூல்களின் விநியோகம் சீரின்றி இருப்பதற்கான காரணம்தான் என்ன? என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. கல்வி ஒழுங்கமைப்பு சீராக இடம்பெற வேண்டுமாயின் பாடப் புத்தக விநியோகம் சீராக்கப்படவேண்டும். புத்தக விநியோகத்தில் ஏற்படக்கூடிய தடைகள் தாமதங்கள் காலத்தை வீணடிப்பதாக இருக்கும்.

அதேநேரம் இலங்கையில் இலவசக் கல்வி இலவச சீருடை, இலவசப் பாடப் புத்தகம் என்பனவெல்லாம் கொண்டுவரப்பட்டதற்குள் அரசியல் காரணங்கள் இருப்பினும் அதன் உள்ளார்ந்த நோக்கம் பணக்கார, ஏழை என்ற பேதம் இன்றி அனைவரும் கல்வியைப் பெற வேண்டும் என்பதாகும்.

ஆனால், இலவசப் பாடப் புத்தகங்களில் ஒரு சிலவற்றை வழங்கிவிட்டு அவற்றை மாணவர்களுக்கு முழுமையாக வழங்காத நிலையில் வசதி படைத்த மாணவர்கள் அந்தப் புத்தகங்களை பிரதி செய்து படிக்கின்றார்கள். இதனால் ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டு மனத்தாக்கத்திற்குள்ளாகிறார்கள்.

ஆக எந்த நோக்கத்துடன் இலவசக் கல்வி கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கத்தையே சீர்குலைப்பதாக ஒழுங்கற்ற இலவசப் பாடப் புத்தக விநியோகம் அமைந்துவிடுகின்றது.

எனவே இது விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் இலவசப் பாடப் புத்தகத்திலும் தற்போது புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது தரம் 7 மாணவர்களுக்கான புதிய பாட நூல் அறிமுகத்தில் மூன்று பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு விரும்பிய ஒன்றை தெரிவு செய்யுமாறு பணிக்கப்படுகின்றது. இதனால் பாடசாலைகள் தம்தம் விருப்பப்படி பாட நூல்களை தெரிவுசெய்கின்றன.

இவ்வாறு பாடப் புத்தகங்கள் தெரிவுக்குள்ளாகின்றபோது ஒத்த இயைபு இல்லாத வேறுபட்ட பாட நூல்களை குறித்த தரத்தில் வெவ்வேறு பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் படிக்க வேண்டியதாகவுள்ளது.

இதனால் தாம் படிக்கின்ற பாடம் குறித்து மாணவர்கள் கூடி சம்பாசிக்கமுடியாத நிலையும் ஏற்படுகின்றது. இந் நிலைமை கற்கையில் சமச்சீரற்ற தோற்றத்தை உருவாக்கிவிடும். எனவே பாட நூல்களின் விநியோகம், ஒரே பாட நூல்களை குறித்த தரத்தைச் சேர்ந்த எல்லா மாணவர்களும் கற்கும்முறை என்பவற்றை கண்டிப்பாக அமுல்படுத்த கல்வியியலாளர்கள் முன்வர வேண்டும்.

## ஜனாதிபதியாகும் சகல தகுதியும் எனக்கு உண்டு பாராளுமன்றத்தில் மகேஸ்வரன் எம்.பி சவால்



(கொழும்பு)

கடல்கோள் அனர்த்த நிவாரணமாக உலக நாடுகள் இலங்கைக்கு வழங்கிய உதவிகளை சுருட்டியவர்களைத் தண்டிகக விரைவில் சட்டமூலமொன்று கொண்டுவரப்பட வேண்டுமென ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட எம்.பி மகேஸ்வரன சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டமூலம் மீதான விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்றபோதே மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் சட்டம்,ஒழுங்கு சீகெட்டுப் போயுள்ளது. ஒருவருக்கு அநீதி நடந்தால் நீதிமன்றுக்குப் போகவேண்டும். ஆனால் இங்கு நீதிமன்றிலேயே அநீதி நடக்கின்றது. நீதிபதிகள் பக்கச் சார்பாக நடந்து கொள்கிறார்கள். நீதிமன்றங்கள் மூலம் அரசியல் பழிவாங்கல்கள் நடக்கின்றன.

ஜனாதிபதி நிதியத்தில் 24 மில்லியன் ரூபா மோசடி இடம பெறறுள்ளது. இதை நாம் எந்த நீதிமன்றுக்குச் சென்று முறையிடுவது?

ஜனாதிபுதி முறையை ஒழிப்பது குறித்து மக்கள் சிந்திக்கவேண்டும். இந்த நாட்டிலுள்ள 1 கோடி 80 இலட்சம் மக்களின் நலனாக அல்லது தனிப்பட்ட ஒருவரின் நலனா முக்கியம் என்பதை அனைவரும் யோசிக்கவேண்டும். இந்த நாட்டுககு நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையே தேவை.

கூட்டரசாங்கத்தின் ஜனாதிபதி வேட்பாளராக யாரை நியமிப்பது என்பதில் இழுபறிப்படுகின்றார்கள். எமது கட்சியில இவ்வாறான பிரச்சினைகள் இல்லை. ஜனாதிபதியாகக் கூடிய அனைத்துத் தகுதிகளும் என்னிடம் உண்டு. யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றேன். கொழும்பில போட்டியிட்டு வெற்றி பெற்றேன். என்னை எங்கு நிறுத்தினாலும் நான் வெற்றிபெறுவேன். என்னைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்.

இந்த அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் டிசம்பர் மாதம் முடிவுகட்டுவோம்.அதுவரை மக்கள் பொறுத்திருக்க வேண்டும். அதன்பின்னர் சுபீட்சமான வாழ்க்கையை அனைத்து மக்களுக்கும் ஐ.தே.க. அரசாங்கம் ஏற்படுத்தித் தரும் என அவர் மேலும் பேசுகையில் கூறினார். (து)

## மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலை மூடப்பட்டதால் நோயாளர்கள் அவலம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலை மூடபபட்டதைத் தொடர்ந்து, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய மார்பு நோயாளர்கள பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதுடன், மார்பு நோய் ஏனைய மக்களுக்கும் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

யாழ்பபாண மாவட்டத்தில் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களைத் தொடர்ந்து மயிலிட்டியில் இயங்கி வந்த அரசின் மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலையானது சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சில காலம் இயங்கி வந்தது.

அதனைத் தொடர்ந்து இந்த வைத்தியசாலை கோப்பாயிலுள்ள அரசினர் வைத்தியசாலைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு சில காலம் செயல்பட்டு வந்தது.

கோப்பாய் வைத்தியசாலையில் குறித்த நோயாளர்களை வைத்துப் பராமரிப்பதற்கு கோப்பாய் பிரதேச மக்கள் தொடாச்சியாக எழுப்பிய கண்டனங்களைத் தொடர்ந்து அங்கு பராமரிக்கப்பட்ட மார்பு நோயாளர்கள் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு இயங்கிய சமயம் மார்பு நோய் வைத்தியசாலையில் பணியாற்றிவந்த பணியாளர்களுக்கும் வல்வெட்டித்துறை வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் இடையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த முரண்பாடுகள் காரணமாக மார்பு நோய் சிகிச்சை நிலையம் நிரந்தரமாக மூடப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களும் அவரவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்.

இதேசமயம், மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை வைத்தியசாலையில் நிரந்தரமாகப் பணியாற்றிய பத்துக்கு மேற்பட்ட பணியாளர்கள் தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள வெவ்வேறு வைத்தியசாலைகளில் பணிபுரிய அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மார்பு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கென மருந்து வகைகளை வழங்கும் கிளினிக் ஒன்று யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள ஒரு தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்றது.

மார்பு நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் மிகவும் பாதுகாப்பான முறையில் வைத்துப் பராமரிக்கப்படல் வேண்டும் என்பது சுகாதார விதிமுறையாகும்.

ஆயினும், யாழ்ப்பாண மாவட்டத்தில் இத்தகைய விதிமுறைகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படாது குறித்த நோயாளர்கள் தம்மிஷ்டம் போல் பொதுமக்களுடன் உலாவித் திரிந்து வருவதால் பெரும் சுகாதாரக் கேடுகள் ஏற்படக் கூடிய ஏதுநிலைகள் உருவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள பொது மக்கள் மத்தியில் மார்பு நோய் தீவிரமாகப் பரவிவிடும் எனவும் அஞ்சப்படுகின்றது.

இதே சமயம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வருடாந்தம் 200க்கு மேற்பட்டவர்கள் மார்பு நோயினால் பீடிக்கப்பட்டு வருகின்றார்கள் என வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (க-16)

## அரசியல் விவாதங்கள் வேண்டாம்; புனரமைப்பில் கவனம் செலுத்துக!

### பிரான்ஸ் பரன்ஸி நிறுவனம் வேண்டுகோள்

(கொழும்ப)

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதகாலமாகியும் புனரமைப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படவில்லை என பிரான்ஸ் பரன்ஸி இன்ரநஷனல் நிறுவனத்தின் இலங்கைக் கிளை தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் தற்சமயம் இந்த விடயம் குறித்து உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அரசியல் விவாதங்களை நடத்திக் கொண்டிருப்பதற்கு இது உகந்த நேரமல்ல. அது நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும். எனவே அரசியல்வாதிகள் ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

இந்தப் புனரமைப்பு நடவடிக்கையின் போது ஊழல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

அதேவேளை பேரலைகளினால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான முழு விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த நிலைமை மக்கள் மத்தியில் ஊழல் சந்தேகங்களை ஏற்படுத்தக்கூடிய விடயமாகும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகமும் ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தோல்வி கண்டிருக்கிறது.

உதவி வழங்கும் நாடுகளும் மக்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

## நெல்லியடியில் திங்கள் முதல் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பிரதேசத்திலுள்ள நெல்லியடி நகரப்பகுதி, வதிரிச்சந்தி, மாலிசந்தி, நாவலர் மடம் சந்தி, கீரிப்பல்லி வீதி, சம்பந்தர் கடை, சாமியன் அரசடி, இராசகிராமம், கோவில் சந்தைப் பகுதியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 30 ஆம் திகதி வரை கட்டாக்காலி நாய்கள நஞ்சூட்டிக் கொல்லப்படவுள்ளன.

இதனால் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு நெல்லியடிப் பொது சுகாதாரப் பகுதி வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என்றாவது புலன்கள் லட்சியமாக இருக்க முடியுமா? சுகபோகங்களை நுகர்வது லட்சியமாக இருக்க முடியுமா? என்றாவது இந்த வாழ்க்கை ஆன்மாவின் லட்சியமாக இருக்கமுடியுமா? அப்படியானால் இந்தக் கணமே சாவது நல்லது. இந்த வாழ்க்கை வேண்டாம்! இதுதான் மனிதனின் விதியானால், அதாவது அவன் ஒரு பூரண எந்திரமாகத்தான் இருக்கப் போகிறான் என்றால் நாம மீண்டும் மரங்களாகவும் கற்களாகவும் போக வேண்டியதுதான்.

சுவாமி விவேகானந்தர்

# சமாதானம் நிலைப்பதை அரசு விரும்பினால் பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும்

## தமிழ் மக்கள் பேரவைத்தலைவர் அறிக்கை

(திருகோணமலை)

சமாதானம் நீடித்து நிலைப்பதை அரசாங்கம் உண்மையாக விரும்பினால் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பை வழங்கி பொதுக்கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டுமென குறிப்பிட்டு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அரசாங்கம் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. சமாதான பேச்சுவார்த்தையை இடைநிறுத்தி ஒன்றரை ஆண்டுகள் கழிந்துவிட்டன எனவே நாம் 20 வருட கால போராட்டத்தில் எத்தனையோ இழப்புக்களை சந்தித்துள்ளோம். தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான காலத்திலும் 60க்குமேற்பட்ட போராளிகளை இழந்துள்ளது.

இந்த நிலையில் இடைக்கால நிர்வாக யோசனையானது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து முற்றாக விலக்கப்பட்டு விட்டதாகவே தாம் கருதுவதாக மக்கள் பேரவையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.ஆழிப்பேரலையின் பின்னர் பொதுக்கட்டமைப்பின் அவசியத்தன்மை கருதி விடுதலைப்புலிகள் பல விட்டுக்கொடுப்புக்களுக்கு உடன்பட்டு பொதுக்கட்டமைப்பு மீதான தமது நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தநிலையில் ஜே.வி.பி, ஹெலஉறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற பேரினவாத் சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பு பற்றி தமது உறுதிப்பாட்டை வெளிப்படுத்த தயங்குகின்றார்.

அத்துடன் இலங்கையில் தொடர்ந்தும் அமைதி நிலைப்பதினை ஜனாதிபதியும் அரசாங்கமும் விரும்பினால் உதட்டளவில் பேசுவதை நிறுத்திவிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவைதலைவர் கேட்டுள்ளார். (7-9)

# அனல் மின் நிலையம் நிறுவ சீன அரசாங்கம் உதவும்

(கொழும்பு)

இலங்கையில் 900 மெகாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்கு சீன நிறுவனம் முன்வந்துள்ளது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி இலங்கை வரவுள்ள சீனப்பிரதமர் அனல் மின் நிலையம தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார். இது தொடர்பான கட்டுமானப்பணிகள் இரண்டு கட்டங்களில் பூர்த்தியாகும். முதல் கட்டத்தின் முடிவில் 300 மெகாவோற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

அமைச்சர் அநுராபண்டாரநாயக்க அண்மையில் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை சீன அரசுடன் நடத்தியிருந்தார். (இ-7-9)

# இலங்கையர் 137 பேர் செங்கடலில் நிர்க்கதியான நிலையில் தவிப்பு

எகிப்தின் செங்கடல் எல்லைப் பகுதியில் தம்மை இலங்கையர்கள் என்று கூறியுள்ள 137 பேர் அநாதரவான நிலையில் இருப்பதாக ஹெய்ரோவிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு எகிப்து அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் தங்கியிருக்கின்ற பகுதி ஹெய்ரோவிலிருந்து சுமார் 500 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய ஹெய்ரோவில் உள்ள இலங்கைத்தூதரக அதிகாரிகள் இவர்கள் தொடர்பான மேலதிக விபரங்களை திரட்டுவதற்காக சென்றுள்ளனர்.

அவர்கள் இலங்கை குடிமக்களா என்பது குறித்தும் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை குடிமக்கள் என்று உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் எகிப்து அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அவர்களை இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்விடயம் தொடர்பாக ஹெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக எகிப்து அதிகாரிகளுடன் இலங்கை வெளிவிவகார அமைச்சு தொடர்ந்து தொடர்புகளை வைத்திருக்கும் என்று வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கலை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலை நிகழ்ச்சி இன்று மாலை 4.30 மணிக்கு இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## சத்திரசிகிச்சை கற்கைநெறி...

அறிவித்துள்ளதாக துணைவேந்தனர் தெரிவித்தார்.

அவ்வாறு தெரிவு இடம்பெறும் காலத்திற்கு முன்னர் அவர் விரும்பின் அவருடைய ஒருவருட கால ஒப்பந்தம் காலாவதியாகும்வரை விரிவுரையைத் தொடர்ந்து பணியாற்றலாம் எனவும் இப்பிரச்சினை தொடர்பில் தான் எதுவித முடிவையும் உறுதிப்படுத்தி கூறமுடியாதுள்ளது எனவும் துணைவேந்தர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ். மருத்துவபீடத்தில் சத்திரசிகிச்சைப் பிரிவை உடனடியாக ஆரம்பிப்பது உசிதமானது எனவும் எந்த விரிவுரையாளர் விரிவுரையைத் தொடர்ந்தாலும் மருத்துவபீட மாணவருக்கு பிரச்சினை இல்லை எனவும் பேராசிரியர் குணானந்தன் நீதிமன்றம் சென்றிருந்த காலப்பகுதியில் டாக்டர் ரவிராஜ் விரிவுரை நடத்தினார் எனவும் தொடர்ந்தும் அவரே தங்களது விரிவுரைகளை தொடர்ந்தாலும் எமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தார்.

எமது சக மாணவர்களுடைய கல்வியைப் பாதிக்காத வகையில் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கான தீர்க்கமான முடிவு நாளைக்குள் எடுக்கப்பட வேண்டுமென மருத்துவபீட மாணவர்கள் எதிர்பார்ப்பதாகவும் காண்டீபன் தெரிவித்தார்.

குறித்த கால எல்லைக்குள் இப் பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படாவிடில் மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர், பாதுகாவலரை அழைத்து அவர்களின் மூலமாக இதற்கான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கண்ணனும் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர். (து-74)

## அரசு-புலிகள்...

கட்டமைப்பு அரசியல்கலப்படமற்றது. அது நிர்வாக நடைமுறை மட்டுமே என அவர் கூறினார்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது குறித்த முடிவுகள் விரைவில் வெளியாகும் எனக் கூறிய கதிர்காமர் அதற்கான காலவரையறைகள் எதனையும் வெளியிடவில்லை. (ச)


## பதவி வெற்றிடம்

- பத்திரிகை விநியோகஸ்தர்கள்
- பத்திரிகை மடிப்பவர்கள்

(பத்திரிகை விநியோகஸ்தர்கள் சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பது அவசியம்)

யாழ். நகரமையத்தில் இருந்து 6 கி.மீ.தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் 26.03.2005 அன்று பிற்பகல் 4 மணிக்கு நேரில் வரவும்.

வலம்புரி
15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

ஆளணி முகாமையாளர்


# ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் மரண தண்டனை நிறைவேற்றப்படும்

(கொழும்பு)

மரணதண்டனை நிறைவேற்றுவதற்கான சட்டமா அதிபரின் அறிக்கை நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் காலத்தில் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படும் எனத் தெரிய வருகிறது.

வெலிக்கடை மற்றும் போகம்பரை சிறைச்சாலைகளில் மரணதண்டனையை நிறைவேற்றும் வசதிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. மேல்நீதி மன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவின் கொலையின் பின்னரே இம்மரணதண்டனை தொடர்பான கருத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-9)

# மட்டு நகரில் நேற்று மோட்ச தீப கிரியை

(மட்டக்களப்பு)

சுனாமிப்பேரலையால் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திக்காக மூன்றாவது மாதம் பூர்த்தி தினமாகிய நேற்று மட்டக்களப்பு கஞுதாவளை பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச தீபகிரியை நடைபெற்றது.

நேற்று பூரணை திதி அமைந்ததாலும் பங்குனி உத்தரம் என்பதாலும் ஆலய நிர்வாகத்தினால் இந்த வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

காலை கஞுதாவளை பிரதானபாதையிலுள்ள கல்லடி பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து மோட்ச தீபசுடர்கள் ஆழிப பேரலையால் உயிரிழந்தவர்களின் உறவினர்களினால் ஏந்தப்பட்டது. பின்னர்கஞுதாவளை சுயம்பு பிள்ளையார் ஆலயத்திற்கு அவைஎடுத்துச்செல்லப்பட்டன.

அங்கு ஆத்மசாந்தி பூசைகள் நடைபெற்றன. திருவாசகம் ஓதுதல், அன்னதானம் வழங்குதல் போன்றனவும் இடம்பெற்றன. உயிரிழந்தவர்களின் உறவினர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர். (இ)

## சர்வமத பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் உயிரிழந்தவர்களின் மூன்றாம் மாத நினைவு தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் 51வது படைப்பிரிவினரால் சர்வமதப்பிரார்த்தனை ஒன்று இன்று பிற்பகல் 5.15ற்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. (ச)

## அரசும் புலிகளும்...

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோப்பாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் நேற்று முன்தினம் ஒஸ்திரிய வெளிநாட்டலுவல்களுக்கான சமஷ்டி அமைச்சக மனித நேய உதவிகள் திணைக்களப்பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலை அடுத்து கருத்து வெளியிட்ட போதே ஸ்ரெய்னர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் அமைதி சமாதானம் நிலைக்கவேண்டும். இதனை நிலை நிறுத்தும்வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை மதித்து இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் அதிகளவு விட்டுக் கொடுப்புடன் செயற்படவேண்டும்.

அமைதி முயற்சியின் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேக்கு நேர்மையான வழியில் ஒஸ்திரியாவின் உதவிகள் கொழும்பு ஊடாக கிடைப்பதை உறுதிப் படுத்தவேண்டும் என்றும் ஸ்ரெய்னர் கூறினார்.

இதேவேளை இச்சந்திப்பில் கலந்து கொண்ட ஒஸ்திரிய சமஷ்டி அமைச்சக மனிதநேய உதவிகள் திணைக்களத் தலைவர் பிராள்ஸ்பேகர் கருத்துத்தெரிவிக்கையில, இலங்கை சுனாமி மீள்கட்டுமானத்தை துரிதப்படுத்த அரசாங்கத்துடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த விடுதலைப்புலிகள் நோர்வேயின் முன்மொழிவுகளை ஏற்று அதிகவிட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட முன்வந்தமையை பாராட்டினார். (இ)


நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
இன்று (26.03.2005) முதல்
விஜயகாந்த், சூசன், செந்தில் நடித்த
நெறஞ்ச மனசு
காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
(24.03.2005 முதல்)
சிம்பு(STR), ஜோதிகா நடித்த
மன்மதன்
கா.நேரம்:-11.00, 2.45, 6.00(பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
12/03/05 தொடக்கம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேலு அங்கீதா நடித்த
லண்டன்

ரீக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளுங்கள். (பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.